விலை: 60.00
பக்கங்கள் : 20
website : www.valampurii.lk
viber : 076 636 3378
E-mail: valampurji@yahoo.com
Registered as a Newspaper in Srilanka

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

# வலம்புரி
## சங்குநாதம்

சங்கு 25
ஒலி 110 வள்ளுவர் ஆண்டு 2055 பங்குனி 25 ஞாயிற்றுக்கிழமை (07.04.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829


## ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியை அரசு சுவீகரிக்க முயற்சி
### தயாசிறி எம்.பி குற்றச்சாட்டு



(கொழும்பு)
ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியை இந்த அரசாங்கம் சுவீகரிக்கவே முயற்சிக் கின்றது என பாராளுமன்ற உறுப் பினர் தயாசிறி ஜயசேகர குற்றம் சுமத்தி யுள்ளார்.

ஸ்ரீ லங்கா சுதந் திரக் கட்சியின் அலு ▷19

## நாட்டின் தேவைகளுக்கு ஏற்றவாறு அரசியல் கட்சிகள் மாற வேண்டும்
### ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு



(கொழும்பு)
கட்சியின் தேவைக்கேற்ப நாட்டின் பொருளாதாரத்தை உருவாக்கவன்றி பொருளா தார ரீதியாக நாட்டைக் கட்டி யெழுப்புவதற்காக்வே இந் நாட்டில் அரசியல்கட்சி அமைப்பு உருவாக்கப்பட வேண்டுமென ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்க தெரிவித்தார்.

கட்சிகளின் விருப்பத்திற் கேற்ப நாட்டின் பொருளா தாரத்தை கொண்டு சென்று நாடு பாரிய ▷19

நாடு முழுவதும்
## வர்த்தக நிலையங்களில் திடீர் சோதனை

(கொழும்பு)
நாட்டில் பண்டிகைக் காலம் நெருங்கி வருகின்ற நிலையில் நுகர்வோரின் பாது காப்பினை உறுதிப்படுத்தும் வகையில் வர்த்தக நிலையங்களில் திடீர் ▷19

புத்தாண்டை முன்னிட்டு
## வறியவர்களுக்கு இலவச அரிசி

(கொழும்பு)
புத்தாண்டை முன்னிட்டு 27.5 லட்சம் வறிய குடும்பங் களுக்கு தலா 20 கிலோ அரிசி வழங்கப்படும் என நிதி இரா ஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

அஸ்வெசும அல் லது ஏனைய உதவி ▷19

# இலங்கையின் பாதுகாப்புக்கு அமெரிக்கா ஒத்துழைக்கும்
### வெள்ளை மாளிகையின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ஜேக் சல்லிவன்



(வோஷிங்டன்)
இலங்கையின் பிராந்திய பாதுகாப்புக்கும் சமாதானத்துக்கும் அமெரிக்கா இலங்கைக்கு உறு துணையாக இருக்கும் என வெள்ளை மாளிகை தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ஜேக் சல்லிவன் ஜனாதிபதியின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சாகல ரத்னாயக்கவிடம் தெரிவித்துள்ளார்.

சாகல ரத்நாயக்கவுடனான தொலைபேசி உரையாடலின் போதே ஜேக் சல்லிவன் இந்த உறுதிமொழியை வழங்கியுள்ளார்.

இந்த உரையாட லில், இருநாட்டு பாது ▷02

### இலங்கை அதன் கடன்களை மீளச் செலுத்துவதை
## 2028 வரை இடைநிறுத்த கடன் வழங்கிய நாடுகள் தீர்மானம்
### சர்வதேச ஊடகம் செய்தி வெளியீடு

(கொழும்பு)
இலங்கை அதன் கடன் களை மீளச் செலுத்துவதை 2028ஆம் ஆண்டுவரை இடை நிறுத்துவது குறித்த இறுதி பேச்சுவார்த்தைகளில் இலங் கைக்கு கடன்வழங்கிய நாடு கள் ஈடுபட்டுள்ள தாக நிக்கேய் ஏசியா ▷19

## ஜனாதிபதி தலைமையில் தேசிய புத்தரிசி விழா



(அநுராதபுரம்)
தேசிய புதிய அரிசித் திருவிழா நேற்று முற்பகல் அநுராதபுரத்தில் இடம்பெற்றது.

பாரம்பரியமாக பெரும் போகத்தில் ▷19

## மோ.சைக்கிள் மோதியதில் ஒருவர் உயிரிழப்பு
### கல்வியங்காட்டில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம் - கல்வியங் காடுப் பகுதியில் மோட்டார் சைக்கிளில் மோதி விபத்துக் குள்ளாகிய முதியவர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கல்வியங்காடு பகுதியில் கடந்த 4ஆம் திகதி இடம்பெற்ற விபத்தில் படுகாயமடைந்து யாழ்.போதனா வைத்தியசாலை யில் அனுமதிக்கப்பட்ட நிலை யில் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார். ▷19

## ஐ.எம்.எப்பின் மூன்றாம் தவணை நிதி ஜூன் மாதத்துக்குள் கிடைக்கும்
### நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான்



(கொழும்பு)
சர்வதேச நாணய நிதியத் தின் நீட்டிக்கப்பட்ட நிதி வசதி யின் மூன்றாவது தவணை ஜூன் மாதத்திற்குள் கிடைக்கும் என எதிர்பார்ப்பதாக நிதி இரா ஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த அமைச் சர், "ஜூன் மாதத்திற் ▷19

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலையாட்கள் தேவை

எமது தளபாட நிலையத்திற்கு கீழ்வரும் வேலையாட்கள் உடன் தேவை. நிரந்தரமான வேலையும் தங்குமிட வசதியும் உண்டு.

- ◆ தளபாட பெயின்ரர் - 65,000/= மேல்
- ◆ கூலி வேலையாட்கள் - 50,000/= மேல்
- ◆ வேலை பழக விரும்புபவர்கள் - 30,000/= மேல்

(383)

ஆர்க் தளபாட நிலையம்
இல.35, கொட்டைக்காடு ஒழுங்கை, கோண்டாவில், கிழக்கு.(பஸ் டிப்போ அருகாமை) T.P - 021 221 9909



## அலுவலக கணக்காளர் தேவை

பதிவு செய்யப்பட்ட தனியார் நிதி நிறுவனம் ஒன்றின் வவுனியா கிளைக்கு பெண் கணக்காளர் தேவை.

- ❑ கணினி அறிவுடன் கணித அறிவும் அவசியம்.
- ❑ ஆங்கில மொழி தேர்ச்சி இருப்பின் மேலதிக தகைமையாக கருதப்படும்.

(C-0080)

**077 558 8141**



## உடல் எடை குறைய வேண்டுமா?

- ○ எடை கூடுகிறதா?
- ○ வயிறு, மார்பு குறைய வேண்டுமா?
- ○ உடல் எடை குறைகிறதேயில்லை என்கின்ற கவலையா?

**பால்மா குளிசை** – வயிறு, மார்பு குறைக்கும் கிறீம்
15 நாள்களில் அற்புத மாற்றத்தை உணர்வீர்கள்

## தலைமுடி நீளமாக வளர வேண்டுமா?

தலைமுடி வளரவேண்டுமா? பேன்,பொடுகு தொல்லையா? ➤முடிகொட்டுகிறதா? ➤இளநரையா? ➤தலையிடியா?➤முடி அடர்த்தி இல்லையா? ➤புதிதாக முடி முளைக்க வேண்டுமா? ➤பொன்னாங்காணி? கரிசலாங்காணி, இலாமிச்சை வேர் கருவேப்பிலை, வல்லாரை, நெல்லி சேர்த்துக்காய்ச்சிய எண்ணெய் குளிசை

இந்த எண்ணையைப் பாவித்து பயனடைய

(381)

## உடல் எடை இலகுவாக கூட வேண்டுமா

எடை கூட வேண்டுமா?, கணச்சூடா?, பலகீனமா?, ஒட்டிய கன்னங்கள் குண்டுக்கன்னங்களாக மாற வேண்டுமா?, மார்பு கூட வேண்டுமா?, உடல் குறைபாடுகளா?
குளிசை, பால்மா என்பன விற்பனைக்குண்டு

## கருமை நிறம் நீங்க வேண்டுமா?

077 210 6155 221. நாவலர் றோட், யாழ்ப்பாணம்.


# நாட்டுக்காக விஜயதாச என்னுடன் இணைந்தார் - ரணில்



அரசியல் ரீதியில் பல்வேறு நெருக்கடியான சூழ்நிலைகளில் விஜயதாச ராஜபக்ஷ நாட்டிற்காக தன்னுடன் இணைந்ததாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

நீதி, சிறைச்சாலை விவகாரங்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி கலாநிதி விஜயதாச ராஜபக்ஷவின் சட்டத்தரணி வாழ்வின் 40 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு கொழும்பு ஹில்டன் ஹோட்டலில் வெள்ளிக்கிழமை (05) இடம் பெற்ற நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்துகொண்டு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனைத் தெரிவித்தார்.

விஜயதாச ராஜபக்ஷவிடம் பயிற்சி பெறும் மற்றும் பயிற்சி பெற்ற கனிஷ்ட சட்டத்தரணிகளால் இந்நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. (ம-7)

## இலங்கை...

காப்பு விவகாரங்கள் தொடர்பில் இருவரும் அவதானம் செலுத்தியுள்ளனர்.

குறிப்பாக இலங்கை மற்றும் அதன் பிராந்திய பாதுகாப்பு நிலைகள், எதிர்காலத்தில் செய்யப்பட வேண்டிய விடயங்கள் தொடர்பில் ஆலோசிக்கப்பட்டுள்ளது.

பிராந்தியத்தில் சமாதானம் மற்றும் பாதுகாப்பை ஒத்துழைப்புடன் தொடர்வதற்காக இலங்கையுடன் அமெரிக்காவின் தொடர்ச்சியான ஈடுபாட்டைப் பேணுவதில் விருப்பம் கொண்டுள்ளதை ஜேக் சல்லிவன் சாகல ரத்னாயக்கவிடம் வெளிப்படுத்தியுள்ளார்.

இலங்கையின் பாதுகாப்பு மற்றும் இறையாண்மை விடயங்களில் அமெரிக்க ஆதரவுடன் செயல்படும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இதேவேளை, சர்வதேச நாணய நிதியத்தின் (IMF) கடன் மறுசீரமைப்புத் திட்டத்தின் தற்போதைய முயற்சிகள் மற்றும் எதிர்கால ஒத்துழைப்புக்கான வாய்ப்புகள் குறித்தும் சல்லிவன் மற்றும் சாகல ரத்நாயக்க கலந்துரையாடியுள்ளனர். (ம-7)

## துயர் பகிர்கின்றோம்

எமது பாடசாலையின்
முன்னாள் அதிபர்

அமரர்
**சி.கிருபாகரன்**



அவர்கள் காலமானார்.
அவரது இழப்பினால்
துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவிப்பதோடு அன்னாரின்
ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.
*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

**யா/இணுவில் இந்துக் கல்லூரி
பாடசாலைச் சமூகம்**

(382)


## வேலையாட்கள் தேவை

திருநெல்வேலி சுப்பர் மார்ட் இற்கு வேலையாட்கள் தேவை.

- ◆ முகாமையாளர்
- ◆ பணியாளர்கள்

ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

(386)

**075 759 0998**



# காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் மருதனார்மடம் சபாபதிப்பிள்ளை வீதியில் வாழ்வகத்திற்கு முன்பாக 36 பரப்பு காணி விற்பனைக்குண்டு.**

### நிலப்பரப்பு

- ◆ 18 அடி பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- ◆ நன்னீர் ஊற்று சூழல்.
- ◆ குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி.
- ◆ மருதனார்மடம் கலைக் கல்லூரிக்கு அருகாமையில் அமைந்துள்ளது.
- ◆ ஒரு பரப்பின் விலை 35 லட்சம்.
- ◆ தரகர் தேவையில்லை.
- ◆ பார்வையிடும் நேரம் : காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை

தொடர்புகளுக்கு : ஜெயம்

(379)

**077 814 7389**
**077 986 5457**



## நாகபூஷணி திருமண சேவை

### இடம் மாற்றம்

திறந்திருக்கும் நேரம் : (7.30 AM - 5.30 Pm)

10/2, முதலாம் ஒழுங்கை, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ்ப்பாணம் வேம்படிச் சந்திக்கு அருகில்)

நீங்கள் விரும்பும் மணமக்கள் ஜாதகங்கள் மிகப் பொருத்தமாக உடன் தெரிவு செய்து தரப்படும்.

(377)

077 138 7596, 071 999 9306, 021 222 9306



# விசா விண்ணப்பம்

சுவிஸ் | கனடா | பிரான்ஸ் | லண்டன் | இத்தாலி | சுவிடன்

ஆகிய நாடுகளுக்கு விசிட் விசா, பொன்சர் விசா மற்றும் வேலைவாய்ப்பு விசாக்கள் என்பன பெற்றுத் தரப்படும்.
அவுஸ்திரேலியா, நியுஸ்லாந் ஆகிய நாடுகளிற்கு விசிட் விசா 45 நாட்களில் பெற்றுத்தரப்படும்.
ஆர்வமுள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும்.

அனைத்து நாடுகளுக்குமான Online பதிவுகள் பெற்றுத் தரப்படும். Visa விண்ணப்பங்களும் Online மூலம் பூர்த்தி செய்து தரப்படும்.

வேலை வாய்ப்பு மற்றும் பொன்சர் விசாக்கள் குறிப்பிட்ட அளவு மாத்திரமே கையிருப்பில் உள்ளது - பதிவுகளுக்கு முந்துங்கள்.

(384)

**உங்களிடம் கனடா நாட்டிற்கான பொன்சர் இல்லையா? கவலையை விடுங்கள் அதை எம்மிடமே பெற்றுக்கொள்ளலாம்.**

குடும்பமாக கனடா நாட்டிற்கு விசிட் விசாவில் செல்பவர்களிற்கு ஓர் அரிய வாய்ப்பு. எங்கள் நிறுவனத்தின் மூலம் செல்பவர்களிற்கு கனடாவில் நிரந்தர குடியுரிமை மற்றும் வதிவிட வசதி என்பன இலவசமாக பெற்றுத் தரப்படும்.

நிபந்தனைகளுக்குட்பட்டது.

"தொலைபேசியில் தகவல்கள் வழங்கப்படமாட்டாது.

**NSA Group of Company (Pvt) Ltd.**
131, Main Street, Jaffna.
077 266 6429, 077 666 9958, 021 221 0969


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 57 லட்சத்து 77 ஆயிரம் இலங்கையர்கள் வறுமையின் கோரப் பிடிக்குள்!

## பேராசிரியர் அத்துகோரள சுட்டிக்காட்டு

**(கொழும்பு)**

**இலங்கையில் 57 இலட்சத்து 77 ஆயிரம் பேர் வறுமையில் வாடுவதாக உலக வங்கியின் அண்மைய அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

பேராதனைப் பல்கலைக் கழகத்தின்பொருளாதார மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களத்தின் பேராசிரியர் வசந்த அத்துகோரள இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்

அதன்படி அதிக பணவீக்கம் மக்களின் வருமானத்தில் அதிகரிப்பு இல்லாமை, வேலை இழப்பு மற்றும் வருமானச் சரிவு ஆகியவையே காரணங்கள் என்று உலக வங்கி வெளிப்படுத்துகிறது என அவர் தெரிவித்தார்.

2023 ஆம் ஆண்டில் இலங்கையில் 25.9% பேர் வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழ்வார்கள் என்பதுடன் தொடர்ந்து நான்காவது ஆண்டாக வறுமை அதிகரித்து வருவதாகவும் அந்த அறிக்கையில் தெரி விக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில் வறுமையில் வாடும் மக்களின் எண்ணிக்கை இந்த ஆண்டு குறையும் என்று வங்கி கணித்துள்ளது. (நி-6)

## டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு

(கொழும்பு)

இலங்கையில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை 20 ஆயிரத்தை தாண்டியுள்ளது என தேசிய டெங்குக் கட்டுப்பாட்டு பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த வருடத்தின் முதல் 3 மாதங்களில் டெங்கு நோயால் 8 மரணங்கள் சம்பவித்துள்ளது.

ஜனவரியில் 10,417 டெங்கு நோயாளர்களும் பெப்ரவரியில் 6,007 டெங்கு நோயாளர்களும் மார்ச்சில் 3,615 டெங்கு நோயாளர்களும் பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

## எரிபொருள் விற்பனையில் வீழ்ச்சி

(கொழும்பு)

எரிபொருள் விற்பனை ஐம்பது வீதத்தால் குறைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. குறித்த தகவலை எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் ஷெல்டன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

மேலும் எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்களுக்கு வழங்கப்படும் மூன்று வீத கொமிஷனில் 18 வீத வற் எனப்படும் பெறுமதி சேர் வரி அறவிடப்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதனை நிறுத்துமாறு அனைத்து பொறுப்பு வாய்ந்த தரப்பினரிடமும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகவும் ஷெல்டன் பெர்னாண்டோ குறிப்பிட்டுள்ளார்.

இந்நிலையில் இந்த கோரிக்கைக்கு உடன்பாடு ஏற்படாவிட்டால் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை (09) எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்கள் ஒன்றிணைந்து முக்கிய தீர்மானமொன்றினை எடுக்க ஆலோசித்து வருவதாகவும் அவர் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (நி-6)


வினோ நகைப்பூங்கா









உங்கள் தங்க நகைகளை டிஜிட்டல் முறையில் துல்லியமாக தரம் பார்த்து தரச்சான்றிதழ் வழங்கப்படும்

(C-0034)




185, கஸ்தூரியார் வீதியில் இயங்கி வந்த எமது ஸ்தாபனம் கடந்த 24.11.2023 முதல் 177, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் இயங்கி வருகிறது என்பதை அன்புடன் அறியத்தருகின்றோம்.

வினோ நகைப்பூங்கா,
இல. 177, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 5394, 021 222 9494, 074 209 9494

கல்யாணமாலை



இடமாற்ற அறிவித்தல்

அன்பான வாடிக்கையாளர்களுக்கு

இலக்கம் 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் இயங்கி வந்த கல்யாணமாலை அலுவலகம் (தற்காலிகமாக) இல.3, 2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் (பழைய வலம்புரி அலுவலகம்) எனும் முகவரியில் இயங்கி வருகிறது என்பதை அறியத்தருகின்றோம்.



மேலதிக தொடர்புகளுக்கு :
021 720 1005
076 097 3120


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ராஜஸ்தானின் 'ராஜா' பட்லர்

## ● வீணானது 'கிங்' ஹோலியின் சதம் ● பெங்களூருவுக்கு மீண்டும் ஏமாற்றம்



ஐ.பி.எல்., லீக் போட்டியில் ஜோஸ் பட்லரின் ஜோரான சதத்தின் மூலம் ராஜஸ்தான் அணி, 6 விக்கெட் வித்தியாசத்தில் பெங்களூருவை வீழ்த்தியது. ஹோலியின் சதம் வீணானது.

இந்தியாவில் ஐ.பி.எல்., தொடரின் 17ஆவது சீசன் நடக்கிறது. மொத்தம் 10 அணிகள் மோதுகின்றன. நேற்று நடந்த போட்டியில் பெங்களூரு, ராஜஸ்தான் அணிகள் மோதின.

பெங்களூரு அணிக்கு ஹோலி, அணித் தலைவர் டுபிளசி ஜோடி ஆரம்பம் வழங்கியது. பர்கெர் வீசிய இரண்டாவது ஓவரில் இரு பவுண்டரி விளாசினார் ஹோலி. பின் அஷ்வின், சகால் பந்தை சுழற்றியதும், பெங்களூரு அணியின் ஓட்டவேகம் குறைந்தது.

மீண்டும் வந்த போல்ட், போட்டியின் 9ஆவது ஓவரை வீசினார். இதில் டுபிளசி இரண்டு சிக்சர் அடிக்க, இந்த ஓவரில் 15 ஓட்டங்கள் எடுக்கப்பட்டன. மறுபக்கம் சகால் பந்தை ஹோலி சிக்சருக்கு அனுப்ப, பெங்களூரு அணி 10 ஓவர்களில் 88/0 ஓட்டங்கள் எடுத்தது.

**ஹோலி சதம்**

ரியான் பராக் பந்தில் சிக்சர் அடித்தார் ஹோலி. முதல் விக்கெட்டுக்காக 125 ஓட்டங்கள் சேர்த்திருந்தபோது, சகால் சுழலில் ஆட்டமிழந்தார் டுபிளசி (44). அடுத்து வந்த மக்ஸ்வெலின் மோசமான "போர்ம்" தொடர்ந்தது. முதல் 4 போட்டியில் 0, 3, 28, 0 ஓட்டங்களில் ஆட்டமிழந்த இவர், நேற்று ஒரு ஓட்டம் மட்டும் எடுத்து பர்கெர் "வேகத்தில்" போல்டானார்.

சவுரவ் சவுகான் (9), சகால் சுழலில் சிக்கினார். பர்கெர் பந்தில் ஒரு ஓட்டம் எடுத்த ஹோலி, ஐ.பி.எல்., அரங்கில் 8ஆவது சதம் எட்டினார். அவேஷ் கான் வீசிய கடைசி ஓவரில் ஹோலி, மூன்று பவுண்டரி அடித்தார்.

20 ஓவர்களில் பெங்களூரு அணி 3 விக்கெட்டுக்களை இழந்து 183 ஓட்டங்கள் மட்டும் எடுத்தது. ஹோலி (113) ஆட்டமிழக்காமல் இருந்தார்.

**"சுப்பர்" ஜோடி**

ராஜஸ்தான் அணிக்கு பட்லர், ஜெய்ஸ்வால் (0) ஜோடி சுமாரான ஆரம்பம் கொடுத்தது. சஞ்சு சாம்சன், பட்லர் இணைந்தனர். இரண்டாவது விக்கெட்டுக்கு 148 ஓட்டங்கள் சேர்த்த போது, சாம்சன் (69) ஆட்டமிழந்தார். பராக் (4), துருவ் (2) நிலைக்கவில்லை. கிரீன் பந்தில் சிக்சர் அடித்த பட்லர், தனது 100ஆவது ஐ.பி.எல்., போட்டியில் சதம் எட்டினார்.



19.1 ஓவர்களில் ராஜஸ்தான் அணி 189/4 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது. பட்லர் (100) ஆட்டமிழக்காமல் இருந்தார். (ம-7)

**"பிங்க்பிராமிஸ்"**

ராஜஸ்தான், பெங்களூரு மோதிய நேற்றைய போட்டி "பிங்க்பிராமிஸ்" தினமாக கொண்டாடப்பட்டது. ராஜஸ்தான் வீரர்கள் "பிங்க்" (இளஞ்சிவப்பு) நிற ஜெர்சி அணிந்து விளையாடினர். போட்டிக்கு முன் ராஜஸ்தான் பெண்களுடன் இணைந்து உணவு தயாரிப்பது, கிணறுகளில் இருந்து நீர் இறைத்தல், வீடு கட்டுதல் என பல வேலைகளில் ஈடுபட்டனர்.

## மரண அறிவித்தல்

**பண்டிதை**

### திருமதி தேவராஜா நாகரத்தினம்

**(ஓய்வுபெற்ற ஆசிரிய ஆலோசகர், வலிகாமம் கல்வி வலயம்)**



பிறப்பு: 24.12.1939 இறப்பு : 06.04.2024

இணுவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பண்டிதை திருமதி தேவராஜா நாகரத்தினம் (ஓய்வுபெற்ற ஆசிரிய ஆலோசகர், வலிகாமம் கல்வி வலயம்) அவர்கள் நேற்று (06.04.2024) சனிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னம்பலம் தேவராஜாவின் (ஓய்வுபெற்ற ஓவசியர்) மனைவியும் காலஞ்சென்ற குழந்தைதம்பி - சின்னத் தங்கைச்சி தம்பதியரின் பாசமிகு மகளும் காலஞ்சென்ற பொன்னம்பலம்-இராசம்மா தம்பதியரின் பாசமிகு மருமகளும் தே.திருமுருகராஜன் JP, (ஆசிரியர் - யா/சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி, முன்னாள் பிரதேச சபை உறுப்பினர், வலிகாமம் தெற்கு பிரதேச சபை), தே.திருமகள் (ஆசிரியர் - யா/ஸ்கந்தவரோதயாக் கல்லூரி), தே.திருக்கணேசராஜன் (கணேசன்) (ஆசிரியர் யா/ஸ்கந்தவரோதயாக் கல்லூரி), செ.திருஞானகௌரி (அபிவிருத்தி உத்தியோகத்தர் - பிரதேச செயலகம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் தி.ஜசந்தா (ஆசிரியர் - யா/ஸ்கந்தவரோதயாக் கல்லூரி), Dr.சீ.செல்வநாயகம் (சட்டத்தரணி) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் தி.கம்சாயினி (யாழ்.பல்கலைக்கழகம் 2ஆம் வருடம்), தி.ஹருசன் (மாணவன் - தொழில்நுட்பக் கல்லூரி), செ.நிஷாஜினி (மாணவி - உடுவில் மகளிர் கல்லூரி), செ.அஸ்வினி (மாணவி - வேம்படி மகளிர் கல்லூரி) ஆகியோரின் பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான பரராஜசிங்கம், மயில்வாகனம் மற்றும் இரத்தினசபாபதி, சண்முகநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான நாகராசா, சகுந்தலாதேவி, தியாகராசா, திரௌபதாதேவி, சர்வானந்தராஜா மற்றும் பத்மாவதி ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.04.2024) ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் ஒரு மணியளவில் நடைபெற்று பூதவுடல் தாவடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.


இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தகவல் : குடும்பத்தினர்

(388) 077 959 0541, 077 899 7978, 077 175 3838

---

**12ம் ஆண்டு நினைவில்**



மலர்வு 02 - 02 - 1946

உதிர்வு 12 - 02 - 2012

அமரர் **சின்னத்துரை கணபதிப்பிள்ளை**

சோமசுந்தரம் வீதி, ஆனைக்கோட்டை.

**14ம் ஆண்டு நினைவில்**




மலர்வு 30 - 08 - 1982

உதிர்வு 13 - 04 - 2010

திருமதி **பிறேமலோஜினி பிரபாகரன்**

கண்ணுக்கு ஒளியாய், நெஞ்சத்தில் நினைவாய் நிலையாய் என்றும் எங்களோடு எங்களின் இறைவனாய் - என்றும் எங்களை வழிநடத்த வணங்குகின்றோம்

**27ம் ஆண்டு நினைவில்**



மலர்வு 03 - 05 - 1981

உதிர்வு 08 - 04 - 1997

அமரர் **கணபதிப்பிள்ளை பிரதீபன்**

(0014)

உங்கள் நினைவுகளுடன்: குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் இருந்து கடத்தி செல்லப்பட்டு இந்திய கடலில் வீசப்பட்ட 5 கிலோ தங்கம் மீட்பு

## மூவர் கைது

(சென்னை)

இலங்கையில் இருந்து சட்ட விரோதமாக கடல் வழியாக படகில் கடத்தி செல்லப்பட்ட சுமார் 5 கிலோ எடை கொண்ட தங்கக் கட்டிகள் அடங்கிய பொதி கடலுக்கு அடியில் இருந்து மீட்கப்பட்டுள்ளது. இந் நிலையில் தங்கத்தை இலங்கை யிலிருந்து கடத்திச் சென்ற மூவரை கைது செய்து இந்திய மத்திய வரு வாய் புலனாய்வுத்துறை அதிகாரிகள் தீவிர விசாரணை நடத்தி வரு கின்றனர்.

இராமநாதபுரம் மாவட்டம் தனுஷ் கோடி இலங்கைக்கு மிக அருகே உள்ளதால் இலங்கையிலிருந்து படகு மூலம் சமீபகாலமாக தமிழ கத்திற்குள் அதிக அளவு தங்கம் கடத்தி செல்லப்படுகின்றது. இதையடு த்து இந்திய-இலங்கை சர்வதேச கடல் எல்லை பகுதியில் சட்ட விரோத நடவடிக்கைகளை தடுக்கவும், அந் நிய ஊடுருவலை கண்காணிக்கவும் இந்திய கடலோர கடற்படை இந்திய கடற்படை மற்றும் சுங்கத்துறை என பாதுகாப்பு துறை அதிகாரிகள் தீவிர கண்காணிப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில் கடந்த வியாழ க்கிழமை அதிகாலை இலங்கை யிலிருந்து படகில் தங்கம் கடத்தி வரப்படுவதாக மத்திய வருவாய் புலனாய்வுத் துறை அதிகாரிகளுக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப் படையில் மண்டபம் கடலோர காவல் படையினருடன் இணைந்து மத்திய வருவாய் புலனாய்வுத்துறை அதிகா ரிகள் மன்னார் வளைகுடா கடல் பகுதியில் தீவிர ரோந்து பணியில் ஈடுபட்டனர்.

அப்போது வேதாளை அடுத்த சிங்கி வலை குச்சு அருகே மன்னார் வளைகுடா கடல் பகுதியில் அமை ந்துள்ள முயல் தீவுக்கும் மணாலி தீவுக்கும் இடையே உள்ள கடல் பகுதியில் சந்தேகத்திற்கு இடமாக நின்று கொண்டிருந்த படகைச் சுற்றி வளைக்க முயன்ற போது படகில் இருந்த நபர்கள் கடலில் ஒரு பொதியை தூக்கி வீசி விட்டு அங் கிருந்து தப்பிச் செல்ல முயன்றனர்.

இதையடுத்து மத்திய வருவாய் துறை புலனாய்வுத்துறை அதிகா ரிகள் அவர்களை மடக்கி பிடித்து கைது செய்யப்பட்ட மூவரையும் படகுடன் மத்திய வருவாய் புல னாய்வுத்துறை அதிகாரிகள் மண் டபம் கடலோர காவல்படை முகா மிற்கு அழைத்து சென்று அங்கு வைத்து விசாரணை நடத்தினர்.

விசாரணையில் தாங்கள் இலங் கையில் இருந்து படகில் தங்கக் கட்டிகளை கடத்தி வந்ததாகவும் அதிகாரிகளை கண்டதும் கடலில் வீசியதாகவும், கடலில் பார்சலை வீசிய இடத்தை ஜி.பி.எஸ் கருவியை கொண்டு அடையாளப்படுத்தி வைத் துள்ளதாக அவர்கள் தெரிவித்ததாக விசாரணை அதிகாரி தெரிவித்தார்.

அதன் அடிப்படையில் வியா ழக்கிழமை மாலை முதல் தொடர்ந்து கடலுக்கு அடியில் ஸ்கூபா வீரர்கள் உதவியுடன் தங்கம் அடங்கிய பொதியை தேடி வந்த நிலையில், நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மாலை 3 மணியளவில் கடலில் வீசப்பட்ட தங்கம் அடங்கிய பொதி மீட்கப்பட்டது. தங்கக் கட்டிகளை இந் திய கடலோர காவல்படை மண்டபம் முகாமுக்கு எடுத்து சென்று எடை போட்டு பார்த்ததில் அதில் 5 கிலோ தங்கம் இருந்தது தெரிய வந்தது.

மேலும் தங்கம் யாருக்காக இலங் கையில் இருந்து கடத்தி வரப்பட்டது என்பது குறித்து கைது செய்யப்பட்ட மூவரிடம் தொடர்ந்து விசாரணை நடத்தப்பட்டு வருவதாக அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். (நி-6)


**லங்கா மஹால் (PVT) LTD**

DHL உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை

அதிவிரைவாக குறைவான விலையில் இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும். நம்பகமான சேவை.

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை.

இந்தியா தொடர்புகளுக்கு :

**00919566156719**

WESTERN UNION WU MoneyGram Ria MONEY TRANSFER

ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு.

077 839 3974

(356)



# சேவை நலன் பாராட்டு

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் கடந்த 8 வருடங்களிற்கு மேலாக சேவையாற்றி ஓய்வு பெறுகின்ற எமது பிரதி அதிபர்

உயர் திரு. **சுப்பிரமணியம் பரமேஸ்வரன் (SLPS-1)**

**T.Trd (Sci), BA, PGDE**




(பிரதி அதிபர் (நிர்வாகம்))

சேவை விபரம்

17.08.1988-09.06.1997
யா/கைதடி விக்னேஸ்வரா வித்தியாலயம் (உப அதிபர்)

10.06.1997-09.07.2000
யா/சந்திரபுர ஸ்கந்தவரோதய மகா வித்தியாலயம் (ஆசிரியர்)

10.07.2000-31.12.2001
யா/நவாலி மகா வித்தியாலயம் (ஆசிரியர்)

01.01.2002-17.02.2012
யா/சந்திரபுர ஸ்கந்தவரோதய மகா வித்தியாலயம் (ஆசிரியர்)

18.01.2012-27.12.2012
யா/பூம்புகார் அ.த.க பாடசாலை (அதிபர் சேவை)

28.12.2012-11.02.2016
யா/சிறுப்பிட்டி இ.த.க பாடசாலை (அதிபர்)

12.02.2016 - இன்று வரை (06.04.2024)
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி.
(உப அதிபர், பதில் அதிபர், பிரதி அதிபர்)

ஓய்வுக்காலம் சிறக்கவும் ஆரோக்கியமான, சந்தோசமான வாழ்வு வாழ இன்றைய அறுபதாவது பிறந்த தினத்தன்று நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்

(332)

ஆசிரியர் கழகம்,
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி.


# இராசிபலன்

07.04.2024
பங்குனி 25, ஞாயிற்றுக்கிழமை
சதுர்த்தசி பின்னிரவு 2.55 மணிவரை

பூரட்டாதி முற்பகல் 11.48 மணிவரை
சுபநேரம் 9.07-10.37 மணிவரை
இராகுகாலம்-4.37-6.07 மணிவரை

சித்தாமிர்தம்
சந்திராஷ்டமம்
பூசம், ஆயிலியம்

**வளவன்**




புதிய பொறுப்புக்கள் வந்து சேரலாம், எடுத்த காரியங்களை நிறைவேற்ற அதிக பிரயாசை காட்ட வேண்டிய நாள், வழிபாட்டால் குதூகலம் காண வேண்டிய நாள்.




மனதில் உற்சாகமும் மகிழ்ச்சியும் அதிகரிக்கும், வம்பு வழக்குகளைச் சமாளித்து வளம் காணும் நாள், கோபத்தைக் குறைத்துக் கொள்வது நல்லது.




நினைத்த காரியத்தை நினைத்த நேரத்தில் முடிக்கும் நாள், சுப செய்திகள் நாடி வரும் நாள், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம்.




கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கலாம், சகோதர வழியில் இனிய செய்திகள் வந்து சேரலாம், பிற இனத்தவரால் பெருமைகள் வந்து சேரலாம்.




பொது வாழ்வில் பாராட்டும் புகழும் கூடும் நாள், வாகன சுகமுண்டு, கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், பொருளாதார முன்னேற்றம் காண வேண்டிய நாள்.




வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம், வாகன பழுதுச் செலவுகள் ஏற்படலாம், உடல்நலனில் கவனம் தேவை.




தூரத்து உறவினர்களின் சந்திப்பு இடம் பெறலாம், மகிழ்ச்சி கூடும் நாள், பிள்ளைகள் வழியில் பெருமை தரும் சம்பவங்கள் இடம்பெறலாம்.




கேட்ட இடத்தில் உதவிகள் கிடைத்து உற்சாகமடைவீர்கள், பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும், நண்பர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும்.




பேச்சைக் குறைத்துச் செயலில் தீவிரம் காட்டுவீர்கள், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், மனதிற்கினிய சம்பவங்கள் இடம் பெறலாம்.




குடும்பத்தினருடன் குதூகலம் தரும் பயணங்கள் இடம்பெறலாம், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள்.




எதிர்காலம் இனிமையாக அமைய திட்டங்கள் தீட்டுவீர்கள், பாசம் மிக்கவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், சுப செய்திகள் வந்து சேரலாம், பயணங்களால் பலனுண்டு.




குடும்ப இரகசியங்களை மற்றவர்களிடம் சொல்லாதிருப்பது நல்லது, திட்டமிட்ட காரியமொன்றில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், கோபத்தைக் குறைத்துக் கொள்வது நல்லது.

பொறாமை மனிதனையே தாக்கும் ஆயுதம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒலிபெருக்கி சாதனத்தினுள் மறைத்து வைத்து கஞ்சா கடத்தல்

## 18 கிலோ கஞ்சாவுடன் மூவர் கைது



(யாழ்ப்பாணம்)

யாழில் சிறிய ரக ஒலி பெருக்கி சாதனத்தினுள் கஞ்சாவை மறைத்து கடத்தி சென்ற குற்றச்சாட்டில் மூவர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் 18 கிலோ கஞ்சா போதைப் பொருளையும் பொலிஸார் மீட்டுள்ளனர்.

சாவகச்சேரி பகுதியில் கடந்த மாதம் 30 ஆம்திகதி 4 கிலோ கஞ்சா போதைப் பொருளுடன் கைது செய்யப்பட்ட இருவரை 7 நாட்கள் பொலிஸ் தடுப்புக் காவலில் வைத்து விசாரணை செய்வதற்கு நீதிமன்று அனுமதி வழங்கியிருந்தது.

இந்நிலையில் கைதானவர்களிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின்போது கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலையடுத்து நேற்று செம்மணி பகுதியில் விசேட சோதனை நடவடிக்கையை பொலிஸார் முன்னெடுத்திருந்தனர்.

சந்தேகத்திற்கு இடமான முறையில் மோட்டார் சைக்கிளில் பயணித்தவர்களை பொலிஸார் மறித்து சோதனையிட்ட வேளை சிறியரக ஒலி பெருக்கி சாதனம் ஒன்றினுள் கஞ்சா போதைப் பொருளை மறைத்து எடுத்து செல்வது பொலிஸாரினால் கண்டறியப்பட்டதையடுத்து மறைத்து வைக்கப்பட்டிருந்த கஞ்சாவை மீட்டதோடு உடமையில் இருந்தும் ஒரு தொகை கஞ்சாவை மீட்டனர். அதனை அடுத்து மூவரையும் கைது செய்த பொலிஸார் அவர்களிடம் மேற்கொண்ட ஆரம்பகட்ட விசாரணையில் மூவரும் மன்னார் பகுதியை சேர்ந்தவர்கள் என தெரியவந்துள்ள நிலையில் கைதான மூவரையும் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (நி-6-33)

# வலையில் சிக்கிய டொல்பின்கள் மீண்டும் கடலில் விடப்பட்டன

## கட்டைக்காட்டில் சம்பவம்



(கரணவாய்)

யாழ்.வடமராட்சி கிழக்கு கட்டைக்காட்டில் நேற்று முன்தினம் வெள்ளிக் கிழமை கரைவலையில் அகப்பட்ட 11 டொல்பின்களும் மீண்டும் கடலில் மீனவர்களால் விடப்பட்டன.

கட்டைக்காடு பகுதியைச் சேர்ந்த மீனவர் ஒருவரது கரைவலையிலே 11 டொல்பின்கள் அகப்பட்டன. குறித்த டொல்பின்கள் வலைக்குள் அகப்பட்டதை அறிந்த மீனவர்கள் பத்திரமாக 11 டொல்பின்களையும் உயிருடன் மீட்டு மீண்டும் கடலுக்குள் பாதுகாப்பாக விட்டனர். டொல்பின்களை உயிருடன் கடலுக்குள் அனுப்பி வைத்த மீனவர்களுக்கு பலரும் பாராட்டுக்களை தெரிவித்து வருகின்றனர். (நி-6-60)

# கடல் அட்டைகளுடன் மன்னாரில் ஐவர் கைது

(மன்னார்)

மன்னார் நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள அச்சங்குளம் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கையின் போது சட்ட விரோதமான முறையில் பிடிக்கப்பட்டு பொதி செய்யப்பட்ட கடல் அட்டைகளை இடமாற்றம் செய்த 5 பேரை கடற்படையினர் கடந்த வியாழக்கிழமை கைது செய்துள்ளனர்.

இதன்போது 589 கடல் அட்டைகள் 3 மோட்டார் சைக்கிள்கள் மற்றும் டைவிங் கியர்களையும் கடற்படையினர் கைப்பற்றியுள்ளனர்.

சந்தேக நபர்கள் மன்னார் பகுதியைச் சேர்ந்த 23 முதல் 60 வயதுக்கு உட்பட்டவர்கள் என அடையாளம் காணப்பட்டனர்.

சந்தேக நபர்கள் 5 பேரும் கடல் அட்டைகள், டைவிங் கியர் மற்றும் 3 மோட்டார் சைக்கிள்களுடன் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக முருங்கன் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக கடற்படை தெரிவித்துள்ளது. (5-6)



யா/மீசாலை விக்னேஸ்வர மகாவித்தியாலயத்தின் இல்ல மெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டிகள் வித்தியாலய முதல்வர் திருமதி. சுதாமதி தயாபரன் தலைமையில் கடந்த புதன்கிழமை பாடசாலை மைதானத்தில் இடம்பெற்றது. (படம்: சுபேசன்)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு :1989 இந்து
நட்சத்திரம்: ஆயிலியம்
கி.பா: 12
உயரம்: 165cm
தகைமை/தொழில்: Bsc in Applied science, Bsc in Quantity Surveying, Business
எதிர்பார்ப்பு: படித்த அழகான பெண்
தொ.இ: B/14401

பிறப்பு:1996 இந்து
நட்சத்திரம்: அனுஷம்
கி.பா: 8 3/4 சூரி செவ் 3 இல்
உயரம்:5'5"
தகைமை/தொழில்: Bsc(Science), MIT(following), Teacher
எதிர்பார்ப்பு: அரச தனியார் உத்தியோகம்
தொ.இ: B/14404

பிறப்பு: 1982 இந்து
நட்சத்திரம்: சதயம்
கி.பா: 10
உயரம்:5'5"
தகைமை/தொழில்: O/L. நகைத் தொழில் (Own)
எதிர்பார்ப்பு: உத்தியோகம். உத்தியோகம் இல்லாதவரும்.
தொ.இ: B/14405

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்: உத்திரட்டாதி
கி.பா: 26 1/2 சூரி செவ் 5 இல்
உயரம்: 6'
தகைமை/தொழில்: A/L, AB (Ship)
எதிர்பார்ப்பு: படித்தவர்
தொ.இ: B/14408

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1999 இந்து
நட்சத்திரம்: பூரம்
கி.பா: 13
உயரம்: 5'1"
தகைமை/தொழில்: Bachlor of Bio medical science, MLT(pvt) final Year
எதிர்பார்ப்பு: படித்தவர்
தொ.இ: G/14402

பிறப்பு-1998 இந்து
நட்சத்திரம்: விசாகம்
உயரம்: 168cm
தகைமை/தொழில்: Food and nutrition, Specialized food science & Technology, Quality Controllor
எதிர்பார்ப்பு: பட்டதாரி, அரச/தனியார் உத்தியோகம்
தொ.இ: G/14403

பிறப்பு -1996 இந்து
நட்சத்திரம்: பூரட்டாதி
உயரம்:5'3"
தகைமை/தொழில்: Bsc, Msc(Following), Marketing Advisor
எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்
தொ.இ: G/14406

பிறப்பு: 2001 இந்து
நட்சத்திரம்: அவிட்டம்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: A/L
எதிர்பார்ப்பு: வெளிநாடு நிரந்தர குடியுரிமை
தொ.இ: G/14411

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலம்புரியின் வாரமலர்
# சங்குநாதம்
நாதம் 435
Viber 076 636 3378



# ஜனாதிபதித் தேர்தல் தமிழர் ஆதரவு யாருக்கு?

மழைக்கு முளைத்த காளான்கள் என்றொரு முதுமொழி உண்டு. அதாவது மழை காலங்களில் மழைத் துளிகளைக் கண்டவுடன் குப்பை கூலங்களில் காளான்கள் முளைத்திருப்பதை நாம் கண்டிருப்போம்.

அது மழைக்காலங்களில் மட்டுமே நடக்கும் சமாச்சாரம். மழை இல்லை என்றால் அவைகள் இருந்த இடமும் தெரியாது வளர்ந்த தடமும் தெரியாது.

இந்த மழைக் காளான்களை பலதரப்பட்ட வகையில் பல தரப்பினருடன் ஒப்பிட்டு உதாரணத்திற்கு கூறுகிறார்கள். பலருக்கு உதாரணமான இந்த முதுமொழி அரசியல்வாதிகளுக்கு மிகப் பொருந்தும். அந்த அளவிற்கு அவர்களின் நடவடிக்கைகளும் செயற்பாடுகளும் இவற்றுடன் நன்கு ஒத்துப் போகின்றன.

அதிலும் எம் தமிழ் அரசியல்வாதிகளுக்கு மிக நன்றாகப் பொருந்தக்கூடியதாக இருக்கின்றது இந்த பழமொழி. அதாவது தேர்தல் வந்துவிட்டால் மழை கண்டு முளைக்கும் காளான்கள் போல இவர்கள் மக்கள் குடியிருப்புகளுக்கு விஜயம் செய்வார்கள்.

மக்களின் குறைகளை கேட்டு அவற்றை குறித்துக் கொள்வார்கள். இது செய்கின்றோம் அது செய்கின்றோம் என பல வாக்குறுதிகளை அள்ளி வீசுவார்கள்.

> ஏமாற்றுவார்கள் என்று தெரிந்து கொண்டும் பெரும்பான்மை வேட்பாளருக்கு ஆதரவளித்து அதன் பின் ஏமாற்றப்பட போகிறோமா? அல்லது தமிழர் சார்பில் ஒரு பொது வேட்பாளரை நிறுத்தி தமிழினத்தின் ஒட்டுமொத்த பலத்தையும் சர்வதேசத்திற்கு எடுத்துரைக்கப் போகிறோமா?



இவை அனைத்திற்கும் மேல் தமிழ் தேசியம், தமிழர் தாயகம், தமிழர் பூர்வீகம், தமிழர் உரிமை, தமிழர் சுதந்திரம் என்று மீற்றராய் உயர்ந்து நிற்பார்கள்.

ஆம் , இலங்கையில் அடுத்து நடக்கப் போகிறது ஜனாதிபதி தேர்தல் என்பது உறுதியாகிவிட்டது.

இலங்கைத்திரு நாட்டில் சிறுபான்மை இனத்தை சார்ந்த ஒருவர் ஜனாதிபதியாக வேண்டும் எனில் அது கனவில்தான் நடக்க வேண்டும்.

அவ்வளவிற்கு பெரும்பான்மை சக்திகளுக்குள் இன -மத சகதி நிறைந்து கிடக்கிறது .

மனிதச் சந்தையில் விற்பனை செய்யப்பட்ட கறுப்பினத்தவர் ஒருவர் அமெரிக்க நாட்டின் ஜனாதிபதியானார் என்பது பலருக்கும் வியப்பிற்குரியது.

ஓ... உலகில் மாற்றம் ஏற்பட தொடங்கிவிட்டது என பலதரப்பட்டவர்கள் செய்தி பரிமாறினார். ஆனால் அது அபிவிருத்தி அடைந்த சகல இனங்களையும் மனிதாபிமான கண் கொண்டு பார்க்கும் சமூகத்தினரால் மாத்திரமே முடியும் என்பதுதான் உண்மை.

இலங்கை போன்ற இன- மத வன்மம் நிறைந்த நாட்டில் அது கனவில் கூட நடந்திராது.

அந்த அளவிற்கு சிறுபான்மை இனத்தின் மீது எல்லையற்ற அட்டூழியங்களை அரங்கேற்றினர் காலம் காலமாக ஆட்சி பீடம் ஏறிய ஆட்சியாளர்கள்.

தேர்தல் காலங்களில் விலை போகும் சிறுபான்மை அரசியல் தலைவர்களை வளைத்துப் போட்டு அவர்களுக்கு பல வாக்குறுதிகளை வழங்குவது போல வழங்கி அதை நம்புவது போல நம்ப வைத்து நாடகமாடி தாம் ஆட்சி பீடம் ஏறியதும் வாக்குறுதிகளை மறந்து விடுவார்கள். இவர்களை ஆதரித்த சிறுபான்மை இன தலைவர்களும் ஏதோ தம்மை நம்ப வைத்து கழுத்து அறுத்து விட்டார்கள் என பாம்பாய் சீற, அதை அப்பாவிப் பொதுமக்கள் நம்பி விடுவார்கள். இது காலம் காலமாக நடந்து கொண்டிருக்கிறது.

இதற்கு சிறுபான்மை தமிழ் மக்களும் சுனைக் கெட்டு விட்டார்கள் என்றே கூற வேண்டும். நாம் செயற்படுவது தமிழினத்தின் நலனுக்காக எனின், பதவி ஆசை பிடித்து கண்ணை பிரிந்து அடிபட வேண்டிய தேவை என்ன?

எனது கை சுத்தம். நான் தமிழர்களின் நலனுக்காக எதையும் செய்யத் துணிந்தவன். இதோ எனது பாராளுமன்ற உறுப்பினர் பதவியை தமிழினத்தின் நலனுக்காக துறக்கிறேன். என பதவி துறந்த தலைவர்கள் எவராவது இருக்கின்றார்களா? அவ்வாறான தலைவர்கள் எவரும் தமிழினத்தில் உருவெடுக்கவில்லை. இதுதான் வேதனையான விடயம்.

பெரும்பான்மை ஆட்சியாளர்கள் எம்மை ஏமாற்றுவார்கள் எனத் தெரிந்த பின்பும் அவர்களை ஆதரிப்பதில் பயன் ஏதும் உண்டா எனின் இல்லை என்றே பதில் எழும்.

இந்த பதிலை சிறு பிள்ளை கூட கூறிவிடும். ஆனால் அது தெரிந்தும் ஆட்சியாளர்களை ஆதரிக்கிறார்கள் எனில், ஏதோ ஆதாயம் உண்டென்று தானே பொருள்.

தமிழினத்திற்கான நீதியை பெற்றுக் கொள்ளக் கூடிய பொன்னான காலத்தை தெரிந்தும் தவற விட்டவர்களிடம் அரசியல் சாணக்கியம் இல்லை என்பது தானே முடிவு. பயங்கரவாதத்தை அழித்த ராஜபக்ஷக்களை சிங்கள மக்கள் கதாநாயகர்களாய் கொண்டாடினர். அந்தக் கொண்டாட்டம் வெகு நாள் நிலைக்கவில்லை.

யாரை கதாநாயகர்கள் என்று கொண்டாடினரோ அவர்களை சிங்கள மக்கள் தூக்கி எறிந்தனர். அவர்களை படுதோல்வி அடையச் செய்தனர்.

ராஜபக்ஷக்களின் வீழ்ச்சியின் பின் மலர்ந்த நல்லாட்சி காலமே தமிழினத்திற்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு நீதி பெறக்கூடிய காலம். சர்வதேச அரங்கில் அந்தப் பொன்னான வாய்ப்பை தவற விட்ட எம் தமிழ் தலைவர்கள் நல்லாட்சி அரசுக்கு அவகாசம் கொடுக்கிறோம் என்று அவர்களின் தலைகளை பாதுகாக்க தலைப்பட்டனர்.

விளைவு போர் நிறைவுற்ற ஒரு தசாப்தம் கடந்த நிலையிலும் தமிழினத்திற்கான நீதி துரும்பளவேனும் கிடைக்கவில்லை. மாறாக ஏலவே இருந்ததைவிட இன ரீதியாகவும் மத ரீதியாகவும் தமிழினத்தை ஒடுக்கும் நடவடிக்கைகளே தீவிரமாகின.

தமிழர் பூர்வீகங்கள் இன்னும் தீவிரமாய் சூறையாடப்படுகின்றன. தமிழின அடையாளங்கள் பௌத்த அடையாளங்களாக மாற்றப்பட்டுக் கொண்டே இருக்கின்றன. தமிழர் வளங்கள் தொடர்ந்து சுரண் டப்பட்டு கொண்டே இருக்கின்றன.

இவற்றை கவனத்தில் எடுத்துக் கொள்ளாத தமிழ் தலைவர்கள் தேர்தல் காலங்களில் எந்த முகத்தை வைத்துக்கொண்டு மக்கள் மத்தியில் வாக்கு கேட்டு வருகின்றனர் என்பது புரியவில்லை.

வாழ்நாள் பாராளுமன்ற உறுப்பினர் பட்டம் பெற்றது போல் நடந்து கொள்வதை மக்கள் நன்கறிவர். ஆயினும் ஒரு கட்டத்திற்கு மேல் அவர்கள் பொறுமையாய் இருப்பார்கள் என்று கணித்து விடக்கூடாது. எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் தமிழினம் என்ன முடிவை எடுக்க வேண்டும் என குளிரூட்டப்பட்ட அறையில்இருந்து முடிவெடுக்கமுடியாது.

மக்கள் சந்திப்புகளை நடத்தி அவர்களின் அபிப்பிராயங்களை கேட்டு அதற்கேற்றால் போல் நகர்வதே தமிழினத்தின் எதிர்காலத்தை தீர்மானிக்கும். இதை விடுத்து எடுத்தோம் கவுத்தோம் என முடிவெடுப்பதற்கு தமிழினத்தின் பிரச்சினை தங்களின் குடும்ப பிரச்சினை இல்லையே. ஆட்சியாளர்களால் தொடர்ந்து ஏமாற்றப்பட்டதன் விளைவு ஜனாதிபதி தேர்தல் வரும் போது ஒரு தமிழ் பொது வேட்பாளர் தேவை என்ற தோற்றத்தை விதைத்து விட்டது.

பெரும்பான்மை சக்திகளுக்கு மத்தியில் சிறுபான்மை தமிழர் ஒருவர் ஜனாதிபதியாக முடியாது என்பது தெரிந்திருந்தாலும், தமிழர் ஒற்றுமையை உலகிற்கு பறைசாற்றும் செயலாய் ஜனாதிபதி தேர்தலை பயன்படுத்தலாம் என்பது அரசியல் ஆய்வாளர்களின் கருத்து.

மாறாக பெரும்பான்மை ஒருவருக்கு தமிழ் தரப்பு ஆதரவு தெரிவிக்குமாக இருந்தால் தெற்கில் வேறொரு முகமாக அது மாற வாய்ப்புகள் அதிகம்.

அதாவது தமிழ் மக்கள் ஆதரிக்கும் வேட்பாளருக்கு புலி சாயம் பூசி, அவர் தமிழ் மக்களுக்கு தமிழிழகத்தை பெற்று தரப் போகிறார் என்ற எதிர் பிரச்சாரம் தெற்கில் எடுபடவே செய்யும்.

நிலை இதுவாக இருக்கையில் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளரை நிறுத்தி தமிழ் மக்களின் வாக்குகளை சிதறடிக்க வேண்டாம் என ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான வஜிர அபயவர்த்தன தெரிவித்திருக்கின்றார். குறித்த விடயம் தொடர்பில் தமிழ் தேசிய கூட்டமைப்பின் முன்னாள் தலைவரும் முது பெரும் அரசியல் சாணக்கியருமான இரா.சம்பந்தனும் தனது கருத்தை தெ்ரிவித்திருக்கிறார்.

ஜனாதிபதி தேர்தலில் தமிழர் சார்பில் பொது வேட்பாளரை நிராகரிப்பதாக அவர் தெரிவித்திருக்கிறார். இதுநாள்வரை பல தரப்பட்ட வேட்பாளர்களை ஆதரித்து தாங்கள் தமிழினத்திற்கு பெற்றுத் தந்த விடயம் என்ன என்பதையும் இனிவரும் தேர்தலில் தங்களின் ஆதரவு யாருக்கு என்பதையும் அவர் தெளிவுபடுத்த வேண்டும்.


ஏமாற்றுவார்கள் என்று தெரிந்து கொண்டும் பெரும்பான்மை வேட்பாளருக்கு ஆதரவளித்து அதன் பின் ஏமாற்றப்பட போகிறோமா?

அல்லது தமிழர் சார்பில் ஒரு பொது வேட்பாளரை நிறுத்தி தமிழினத்தின் ஒட்டுமொத்த பலத்தையும் சர்வதேசத்திற்கு இடித்துரைக்கப் போகிறோமா? இதை தமிழினமே தீர்மானிக்க வேண்டும்.

**அபிமன்யு**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு



## கள்ள உறுதி எழுதினாலும் கைது செய்யக் கூடாது...?

**வா**த்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறைவணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து வாத்தியார் வைத்திலிங்கம் எழுந்தார். யாழ்ப்பாண வலயக் கல்விப் பணிப்பாளராகவும் வடக்கு கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளராகவும் கடமையாற்றி ஓய்வு பெற்ற மிஸ் திலகவதி பெரியதம்பி அவர்கள் காலமாகிவிட்டார்.

மிகச் சிறந்த நிர்வாகி. போர்க் கால சூழலிலும் மிகத் துணிச்சலோடு கடமையாற்றிய மிஸ் பெரியதம்பி அவர்களுக்கு இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்துவோம் எனக் கூற.

அனைவரும் எழுந்து நின்று இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து பண்டிதர் பரமலிங்கம் எழுந்தார்.

வேலணை மத்திய கல்லூரியின் ஓய்வு பெற்ற அதிபர் சிவசாமி கிருபாகரன் அவர்களின் மறைவுச் செய்தியறிந்து மிகுந்த வேதனையடைகின்றோம்.

ஓய்வு பெற்றிருந்த மிகச் சொற்ப காலத்தில், ஏற்பட்ட அவரின் மறைவு ஈடு செய்ய முடியாத இழப்பாகும்.

மிகச் சிறந்த கவிஞர் வேலணையூர் தில்லைச்சிவனின் மகனான ஓய்வு நிலை அதிபர் கிருபாகரனுக்கு இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்துவோம் எனக்கூற, மீண்டும் அனைவரும் எழுந்து நின்று இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து விதானையார் விசுவலிங்கம் எழுந்தார். ஆனைக்கோட்டை கமக்காரர் அமைப்பின் செயலாளராக நீண்டகாலம் அர்ப்பணிப்போடு சேவையாற்றிய மாதர் மகாலிங்கம் அவர்கள் காலமாகி விட்டார்.

அவரின் மறைவுக்கு இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்துவோம் எனக் கூற, அனைவரும் எழுந்து இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தி அமர்ந்தனர்.

இதனைத் தொடர்ந்து ஆலடியில் அமைதி நிலவியது. அந்த அமைதிக்குள் சாத்திரியார் சதாசிவம் ஆழ்ந்த யோசனையில் மூழ்கியிருந்தார்.

இதனை அவதானித்த கங்காணியார் என்ன சாத்திரியார் கடும் யோசனையில இருக்கிறியள் என்ன சங்கதி.

**சாத்திரியார்:-** எல்லார் வீட்டிலும் குறைந்தது ஒவ்வொரு சட்டத்தரணி இருந்தால் தான், இனி எங்கட மண்ணில வாழலாம் எண்ட நிலை வந்திட்டுது.

இவ்வாறு சாத்திரியார் கூறியதும். ஆலடியில இருந்தவர்கள் அனைவரும் சாத்திரியாரைத் திரும்பிப்பார்த்தனர்.

இதன்போது இடையில் குறுக்கிட்ட மூப்பர் என்ன சாத்திரியார் சொல்லுறியள் என வினவினார்.

**சாத்திரியார்:-** இப்ப எங்கட மண்ணில கள்ள உறுதி எழுதுகிற வேலை அறம்புறமாக நடக்குது.

இப்படிக் கள்ள உறுதி முடிக்கிற வேலையில சில சட்டத்தரணிகள் ஈடுபடுகினம் எண்டு பரவலாகக் கதைபடுகுது.

அப்படிக் கள்ள உறுதி எழுதினாலும் அந்தச் சட்டத்தரணிகளைக் கைது செய்யக் கூடாது எண்ட கருத்து ஒரு தரப்புச் சட்டத்தரணிகளிட்ட இருக்கிறதாகக் கேள்வி.

**கங்காணி:-** இதென்ன நாசமறுப்பு. சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்பது தானே நீதி. அப்ப சட்டத்தரணிகளைக் கைது செய்யக் கூடாது எண்டால் அதின்ர பொருள் என்ன?

**விதானையார்:-** உண்மையில எங்கட மண்ணில மிகவும் நேர்மையான சட்டத்தரணிகள் பலர் இருக்கினம்.

இருந்தும் ஒரு சில சட்டத்தரணிகள் செய்கின்ற திருகுதாள வேலைகளால எல்லாருக்கும் பங்கம் ஏற்படத் தான் செய்யுது.

**பண்டிதர்:-** சட்டத்தரணிகளை வழக்கறிஞர் என்று உரைப்பது எங்கட தமிழ்ப் பண்பாடு. அவ்வாறு வழக்கறிஞர் எண்டு விழித்துச் சொல்வதற்குக் காரணம் அறிஞர்கள்; அறத்தின் வழி-தர்மத்தின் வழி நின்று தம் பணியை ஆற்ற வேண்டும் என்பது தான்.

பொதுவில வழக்கறிஞர்களும், மருத்துவர்களும் தர்மத்தைப் பின்பற்றத் தவறுவார்களாயின், அதனால் மக்கள் சதா துன்பத்தையும் கஷ்ரத்தையுமே அனுபவிப்பர்.

**சிறாப்பர்:-** உண்மை தான். நீதிமன்ற வாசலுக்குச் செல்லாத எத்தனையோ நல்ல மனிதர்கள் இன்றைக்கு நீதிமன்றப் படியேறி தங்கட காணிக்காக வழக்காடுகினம்.

என்ன செய்யிறது. அப்பாவிகள், அடக்கமானவர்கள், வன்சொல்லறியாதவர்களின் காணிகளுக்குக் கள்ளஉறுதி முடிச்சுக் குடுக்க; அதுகள் கண்ணீரும் கம்பலையுமாக அலையுதுகள்.

போதாக்குறைக்கு கள்ள உறுதி எழுதிக் கொடுத்தவர்களைக் கைது செய்யக் கூடாது எண்டு வாதாடுகிறதுக்கும் ஒரு கூட்டம்.

**கங்காணி:-** எங்கட சட்டத்தரணிகள் இது தொடர்பில ஒரு சரியான தீர்மானத்தை எடுக்க வேணும்.

நேர்மையீனமாக உறுதி எழுதுகின்ற எவரையும் நாங்கள் காப்பாற்ற மாட்டம் எண்டு சட்டத்தரணிகள் கூட்டாக ஒரு தீர்மானத்தை எடுத்தால், எல்லாம் நேர்மையாக நடக்கும்.

**வாத்தியார்:-** அதெங்க நடக்கப் போகுது.

யார் யாரெல்லாம் நேர்மையானவர்கள் எண்டு நாங்கள் நினைத்தமோ அவர்கள் எல்லாம் கள்ள உறுதி எழுதினவர்களைப் பாதுகாக்க களம் இறங்குகினம் எண்டு அறிஞ்சபோது தலைசுற்றிச்சுது.

பரவாயில்லை, அறம் என்பது நடிக்கிற விடயமல்ல. அது கடைப்பிடிக்கிற விடயம். அறத்தை யார் மீறினாலும் தெய்வம் நிச்சயம் தண்டிக்கும் என்பது தான் எனக்குத் தெரிந்தது.

வாத்தியார் வைத்திலிங்கம் கூறி முடிப்பதற்குள், அதனை ஆமோதிப்பது போல ஆலடிப் பிள்ளையார் கோவில் கண்டாமணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.

ஆதித்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






சேர்ச்சிலின் தோல்வியும் புடினின் வெற்றியும் பற்றிக் கூறுவீர்களா வியாசரே?

**சுதன் குப்பிளான்**

**ஈஸ்டர் தாக்குதல் தகவலை மறைத்தவர்களுக்கு என்ன தண்டனை கொடுக்கலாம் வியாசரே?**

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் உலக வரலாற்றில் இலங்கைக்கு வீழ்ந்த கறுப்புப் புள்ளி.
அந்தளவிற்கு உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் தாக்கம் இருந்தது.
உயிரின் மதிப்பை உணராதவர்களின் வன்மப் புத்தியின் வெளிப்பாடே உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல்.
அப்பாவி உயிர்களை ஆலயத்தில் வைத்து அநியாயமாய் எடுத்தார்கள். எவராக இருந்தாலும் அவர்களுக்கு அதி உச்ச தண்டனை வழங்கப்பட வேண்டும்.
அவர்களுக்குக் கொடுக்கும் தண்டனையினைப் பார்த்து இனி எவரும் இவ்வாறு தவறு செய்யாமல் இருக்கும் அளவுக்கு அந்த தண்டனை இருக்க வேண்டும்.
குறித்த தாக்குதலை மேற்கொண்டவர்களுக்கே இப்படி தண்டனை கொடுக்க வேண்டும் என்றால் அவ்வாறு ஒரு தாக்குதல் நடக்கப் போகி றது என்று தெரிந்தும் அதை மறைத்தவர்களுக்கு எவ்வாறான தண்டனை கொடுக்க வேண்டும் கூறுங்கள்.
அவருக்கான தண்டனை அவரை மக்கள் கைகளில் ஒப்படைப்பது தான். மக்கள் வழங்கும் தண்டனை மிக மோசமானதாக இருக்கும்.
நடக்குமா? நடந்தால் தான் உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் இறந்தவர்களின் ஆத்மா சாந்தி பெறும்.

**கணேஸ் பருத்தித்துறை**

**சேர்ச்சிலின் தோல்வியும் புடினின் வெற்றியும் பற்றிக் கூறுவீர்களா வியாசரே?**


இரண்டாம் உலக மகா யுத்தத்தில் பல்லாயிரம் அப்பாவி உயிர்கள் மடிவதற்கு காரணமாக இருந்தவர் பிரித்தானியாவின் இராணுவ அதிகாரியாக இருந்த வின்சன் சேர்ச்சில் அவர்கள்.
1943 ஆம் ஆண்டு வங்காளத்தில் ஏற்பட்ட கடும் பஞ்சத்தினால் இலட்சக்கணக்கான மக்கள் பட்டினியினால் மடிந்து போயினர்.
அந்தளவிற்கு சேர்ச்சில் குணம் மிக வன்மம்-நிறவெறி நிறைந்தது. இரண்டாவது உலக யுத்தம் நிறைவுற்றது. சேர்ச்சில் தன்னை அரசியல் தலைவராக மக்கள் ஏற்பார்கள் என நினைத்து தேர்தலில் நின்றார். முடிவு படுதோல்வியாக அமைந்தது.
பிரிட்டிஷ் மக்கள் புத்திசாலிகள். இரத்தக்கறை படிந்த கைகளை அவர்கள் ஏற்கவில்லை.
ரஷ்ய அதிபர் புடின் உக்கிரைன் மீது கொலை வெறி தாக்குதல் நடத்துகிறார். ரஷ்ய-உக்ரைன் போர் மூன்றாம் உலகப் போருக்கு வழிவகுக்கும் என்கிறார்கள் ஆய்வாளர்கள்.
ஆயினும் நடந்து முடிந்த ரஷ்ய தேர்தலில் புடின் அமோக வெற்றி பெற்றிருக்கிறார்.
அவ்வாறெனின் ரஷ்ய மக்கள் மூன்றாம் உலகப் போரை விரும்புகின்றனர் போலும். க்றை படிந்த கைகளை விரும்புகின்றனர் போலும்.
**பிரித்தானிய மக்கள் புத்திசாலிகள். ரஷ்ய மக்கள்?**

**அன்பு வாசகர்களே!**
**உங்கள் எண்ணத்தில் தோன்றிய கேள்விகளை**
**076 097 3126**
**என்ற இலக்கத்திற்கு SMS செய்யுங்கள்**

**ஜெகமோகன் கொக்குவில்**

**வெங்காயம், உருளை, நெத்தலி, மாசி இறக்குமதியில் 8000 கோடி ஆட்டையைப் போட்டிருக்கிறார்களே?**

தம்பி ஜெகமோகன் இது ஒன்றும் புதிய விடயம் இல்லையே. ஆட்டையைப் போடுவதும், ஓட்டையைப் போடுவதும் அரசியலில் சாதாரணமப்பா.
எண்ணாயிரம் கோடி என்பது ஒரு சின்னக் காசு. இதைவிட பெரிய பெரிய திருடர்களெல்லாம் நம் நாட்டில் பயமின்றி சுதந்திரமாய் சுற்றித்திரிகிறார்களேயப்பா. இவர்கள் இந்த நாட்டை சுரண்டியதும் சூறையாடியதும் அனைவருக்கும் தெரியும் என்பது தான் வேதனையான விடயம்.
இப்படி மக்கள் வரிப்பணத்தை தம் பணமாக்கும் பேராசைக்காரர்களுக்கு வாக்களித்த மக்களுக்கு சவுக்கடி வழங்குவது தான் சரியான தண்டனையாக இருக்கும். இதைநாம் கூறும் போது நல்ல அரசியல் வாதிகளுக்கு கோபம் வரும். அன்பார்ந்த அரசியல் வாதிகளே. இது உங்களுக்கான தொப்பி அல்ல. அளவானவர்கள் மட்டும் போட்டுக் கொள்ளும் தொப்பியே இது.
எம் தமிழ் அரசியல் தலைவர்களிடம் இந்தப் பழக்கம் கிடையாது. வாகனப் போமிட்டை விற்பது. மதுபானசாலை, எரிபொருள் நிரப்பு நிலை போமிட்டை வாங்கி விற்பது அல்லது நிழல் முதலாளியாய் இருப்பது. இது தான் எம்மவர்க்குத் தெரிந்தது.



வியாசரே பெண்ணே பெண்ணிற்கு எதிரியாய் இருந்து ஆணாதிக்கத்திற்கு நெய் ஊற்றினால் பெண் ஒடுக்கு முறை ஒழியுமா?

**மதுவன் மீசாலை**

**இராமர் பாலம் அமையப் போவதாக இலங்கை, இந்திய அரசுகள் கூறுகின்றனரே உண்மையா வியாசரே?**

இந்திய இலங்கைக்கான தொடர்பு என்பது எம் பண்பாடு கலாசாரங்களுடன் பின்னிப்பிணைந்த ஒன்று. அதை அவ்வளவு சீக்கிரத்தில் எவராலும் அறுத்துவிட முடியாது.
இலங்கை மன்னன், சிவபக்தன், தமிழ் மன்னன் இராவணன் சீதையை கவர்ந்து இலங்கைக்கு கொண்டு வர; சீதையை மீட்க இராமன் போட்ட பாதையே இராமர் பாலம்.
இந்த உன்னத வரலாற்றைப் புரிந்து கொண்டாலே இலங்காபுரி யாருக்குச் சொந்தமானது என்பது புரிந்துவிடும்.
இராமர் பாலம் அமைய வேண்டும். இலங்கை, இந்தியா தரைவழி இணைய வேண்டும். அப்போது தான் தமிழினத்திற்கு ஒரு தீர்க்கமான தீர்வு கிடைக்கும்.
இந்தியாவை அச்சுறுத்தும் சீனாவை அடக்க இந்தியா முயற்சிக்கிறது. அந்த முயற்சி இராமர் பாலம் அமைப்பதனூடாக நிறைவேறினால் சீனாவினால் இந்தியாவை எதுவும் செய்துவிட முடியாது.
அமையட்டும் இராமர் பாலம் அமையட்டும். தமிழினத்தின் கண்ணீருக்கு விடிவு கிடைக்கட்டும் சீனாவின் கொட்டம் அடங்கட்டும்.

**இளங்கோ மானிப்பாய்**

**வியாசரே பெண்ணே பெண்ணிற்கு எதிரியாய் இருந்து ஆணாதிக்கத்திற்கு நெய் ஊற்றினால் பெண் ஒடுக்கு முறை ஒழியுமா?**

முதலில் நிறுத்தப்பட வேண்டியது தொலைக்காட்சித் தொடர்களே.
அவை இருக்கும் வரை பெண்களின் புத்தியை பேதலிக்கச் செய்து கொண்டு தான் இருக்கும்.
அந்தளவிற்கு தொலைக்காட்சித் தொடர்கள் பெண்களை பெரும் பூதமாக மாற்றிக் கொண்டிருக்கிறது.
எந்தத் தொடரை எடுத்தாலும் மாமியார், மருமகள் சண்டை,இரண்டு பெண்கள் ஒரு ஆணுக்காக போட்டி போடுவது, ஒரு பெண் இன்னொரு பெண்ணை அசிங்கப்படுத்துவது, அழிக்க நினைப்பது.
இப்படிப் பெண் பாத்திரங்கள் மிகக் கொடூரமான பாத்திரங்களாகச் சித்தரிக்கப்பட, அதை சதா பார்க்கும் பெண்களின் மனநிலை எவ்வாறு இருக்கும்.
இந்தக் கொடுமைகள் அனைத்திற்கும் ஒரு முடிவு தேவை. பெண்கள் உலகாளும் வல்லமை கொண்டவர்கள் என்ற எண்ணத்தை விதைக்கும் செயற்றிட்டத்தில் இறங்கினால் அனைத்திற்கும் தீர்வு கிடைத்துவிடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காலத்தால் அழியாத கானங்கள்

திரைப்படம்: நாடோடி
பாடியவர்: டி.எம். சௌந்தரராஜன்,
இயற்றியவர்: கவிஞர் கண்ணதாசன்
இசை: எம்.எஸ். விஸ்வநாதன்



கடவுள் செய்த பாவம் இங்கு காணும் துன்பம் யாவும்
என்ன மனமோ என்ன குணமோ – இந்த
மனிதன் கொண்ட கோலம் மனிதன் கொண்ட கோலம்

கடவுள் செய்த பாவம் இங்கு காணும் துன்பம் யாவும்
என்ன மனமோ என்ன குணமோ – இந்த
மனிதன் கொண்ட கோலம் மனிதன் கொண்ட கோலம்

பொருளேதுமின்றி கருவாக வைத்து
உருவாக்கி விட்டுவிட்டான்
அறிவென்ற ஒன்றை மரியாதை இன்றி
இடம் மாற்றி வைத்து விட்டான்
பொருளேதுமின்றி கருவாக வைத்து
உருவாக்கி விட்டுவிட்டான்
அறிவென்ற ஒன்றை மரியாதை இன்றி
இடம் மாற்றி வைத்து விட்டான்

கடவுள் செய்த பாவம் இங்கு காணும் துன்பம் யாவும்
என்ன மனமோ என்ன குணமோ – இந்த
மனிதன் கொண்ட கோலம் மனிதன் கொண்ட கோலம்

நண்பர்கள் பகைவர்கள் யாரென்றும்
நல்லவர் கெட்டவர் யாரென்றும்
நண்பர்கள் பகைவர்கள் யாரென்றும்
நல்லவர் கெட்டவர் யாரென்றும்
பழகும் போதும் தெரிவதில்லை
பாழாய்ப் போன இந்த பூமியிலே
பழகும் போதும் தெரிவதில்லை
பாழாய்ப் போன இந்த பூமியிலே

முகத்துக்கு நேரே சிரிப்பவர் கண்கள்
முதுகுக்கு பின்னால் சீறும்
முகஸ்துதி பேசும் வளையும் குழையும்
காரியமானதும் மாறும் ம் காரியமானதும் மாறும்

கடவுள் செய்த பாவம் இங்கு காணும் துன்பம் யாவும்
என்ன மனமோ என்ன குணமோ – இந்த
மனிதன் கொண்ட கோலம் மனிதன் கொண்ட கோலம்

கொடுப்பவன் தானே மேல் ஜாதி
கொடுக்காதவனே கீழ் ஜாதி
கொடுப்பவன் தானே மேல் ஜாதி
கொடுக்காதவனே கீழ் ஜாதி
படைத்தவன் பேரால் ஜாதி வைத்தான்
பாழாய்ப்போன இந்த பூமியிலே
படைத்தவன் பேரால் ஜாதி வைத்தான்
பாழாய்ப்போன இந்த பூமியிலே
நடப்பது யாவும் விதிப்படி என்றால்
வேதனை எப்படி தீரும்?
நடப்பது யாவும் விதிப்படி என்றால்
வேதனை எப்படி தீரும்?
உடைப்பதை உடைத்து வளர்ப்பதை வளர்த்தால்
உலகம் உருப்படியாகும் .ம் உலகம் உருப்படியாகும்

கடவுள் செய்த பாவம் இங்கு காணும் துன்பம் யாவும்
என்ன மனமோ என்ன குணமோ – இந்த
மனிதன் கொண்ட கோலம் மனிதன் கொண்ட கோலம்

# ஆலயங்கள் உன் அகங்காரத்தை துறக்கச் செய்யும் சரணாலயங்கள்

**இவ்வுலகில் உனது உண்மை இயல்பானது. உடல், மனம், புத்தி, சித்தம் கடந்து செயலற்றிருக்கும் ஆன்ம நிலையாகும். அந்த நிலையை நீ பெறுவதே அதியுச்ச விடுதலையாகும். அதற்கு ஆலய வழிபாடு என்பது மிகத்துணை புரிகின்ற ஒன்று.**

ஒவ்வொரு மனித ஆன்மாக்களின் சரீரத்தையும் மனதையும் வளப்படுத்தி புனிதமாக்கி பக்குவப்படுத்தும் இடமாக பெரும்பாலும் இந்து ஆலயங்களே பெரும் பங்காற்றி வருகின்றது என்பதை ஒவ்வொரு இந்துவும் புரிந்து கொள்ள வேண்டும்.

உன் சரீரமும் அதற்குள் ஒரு தொகுப்பாய் சூட்சுமமாக இயங்கி வரும் மனதின் எண்ணங்களும் நிச்சயம் புனிதமடைய வேண்டுமானால், உன் தலைக்கு மேலே குடி கொண்டிருக்கும் அகங்காரத்தை நீ ஆலயத்தின் பலிபீடத்தில் உள்ள இறைவனின் பாதார விந்தங்களில் இறக்கி வைத்தால் ஒழிய எந்த மாற்றத்தையும் உன்னால் உனக்குள் எளிதில் கொண்டு வர முடியாது.

அகங்காரத்தை இறைவனின் பாதாரங்களில் தொலைத்து உன் ஆன்மாவை இறைவனோடு லயமாக்கும் செயலே ஆலய வழிபாடாகும். இந்த தத்துவத்தை நீ உணரவில்லை எனில் உனது ஆலய வழிபாடு என்பது சுற்றி பார்க்கும் வெறும் கண்காட்சி கூடமாகவே என்றும் மாறி விடும்.

பாவம் இரும்பு விலங்கு, புண்ணியம் பொன் விலங்கு இரண்டும் நீ செய்த செயல்களின் அகங்காரத்தின் நிமித்தத்தால் விளைந்த விலங்குகள் தான் என்பதை ஒருபோதும் மறந்து விடாதே.

உனக்குள் செயலாற்றிக் கொண்டிருக்கும் கடும் உச்சத்தில் உள்ள அகங்காரத்தின் நிமித்தமே நீ கடும் பாவங்களையும் அல்லது கடும் அகங்காரத்தின் நிமித்தமே நீ பெயருக்காகவும் புகழுக்காகவும் புண்ணியங்களையும் செய்து வருகின்றாய். இரண்டுக்கும் அடிப்படை உனக்குள் நிரந்தரமாய் குடி கொண்டிருக்கும் அகங்காரம்தான்.

பாவம்தான் செய்யக் கூடாது புண்ணியமும் செய்யக் கூடாதா என்ற சந்தேகம் உனக்குள் வலுக்கலாம். புண்ணியத்தை நீ செய்ய வேண்டும் என விரும்பினால் இறைவன் பெயரில் நீ செய்ய வேண்டும். இல்லையேல் அந்த புண்ணியத்தின் விளைவுகளை அனுபவிப்பதற்கு நீ மறு பிறவியெனும் பந்தத்துக்குள் சுழற்சி முறையில் வர வேண்டியிருக்கும்.

ஏனெனில் பாவங்களை தூரத்தே விலக்கி நல்ல செயல்களை செய்யும்போதும்கூட புண்ணிய செயல்களின் லாப நட்டங்களை அது கற்பனை செய்யத் தொடங்கி விடும். அப்படி தொடங்கி விட்டால் ஞானியாக இருந்தாலும் பிறவித்தளையிலிருந்து தப்பவே முடியாது என்பதே அனுபவ ஞானிகள் கண்ட பெரும் உண்மையாகும்.

மனதின் உண்மை இயல்பு உனக்குள் குடியிருக்கும் அகங்காரத்தை மென் மேலும் வளர்ப்பதோடு நின்று விடாமல். அந்த அகங்காரம் நீ எந்தச் செயலைச் செய்தாலும் நானே செயலாற்றுகின்றேன் என்ற எண்ணத்தை தவறாக உனக்குள் பிரதிப்பலித்து விடுகின்றது.

இந்த பிரதிப்பலிப்பின் விளைவாக மீண்டும் அகங்காரமானது முடிவற்று காடுபோல் வளர்ந்து விடுகின்றது. இதிலிருந்து முழுமையாக நீ விலக வேண்டும் என்றால் மனதின் பிடியிலிருந்து நீ முதலில் விடுபட வேண்டும். அதுவே அகங்காரத்தை அழிப்பதற்கான சரியான உபாயமாகும்.

இவ்வுலகில் உனது உண்மை இயல்பானது உடல், மனம், புத்தி, சித்தம் கடந்து செயலற்றிருக்கும் ஆன்ம நிலையாகும். அந்த நிலையை நீ பெறுவதே அதியுச்ச விடுதலையாகும். அதற்கு ஆலய வழிபாடு என்பது மிக துணை புரிகின்ற ஒன்று.

ஆலயத்தில் வேட்டியுடனும் பட்டையுடனும் உருத்திராட்சக் கொட்டையுடனும் செல்வதால் நீ சிறந்த பக்தனாகிவிட முடியாது. உன் அகங்காரத்தையும் சேர்த்து துறப்பதால்தான் நீ இறைவனுக்கு பிரியமான பரிபூரண பக்தனாக முடியும் என்பதை ஒருபோதும் மறந்து விடாதே.

சாம் - ரமேஸ்குமார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கம்யூட்டர் கழிவிலிருந்து தங்கம்

**20 பழைய கம்யூட்டர் மதர்போர்டுகளில் இருந்து 450 மில்லி கிராம் தங்கத்தை எடுத்துள்ளனர். கிடைக்கப்பெற்ற தங்கத்தில் 22 கரட்டுக்கு ஒத்த அளவில், 91 வீதம் தங்கம் மற்றும் மீத அளவு செம்பு இருந்துள்ளது.**

எலெக்ட்ரானிக் கழிவுகள் (E-waste) வளர்ந்து வரும் ஆபத்தாக மாறியுள்ளது. ஆனால், இதிலிருந்து தங்கத்தை எடுத்து லாபம் ஈட்டும் வழியை சுவிட்சர்லாந்தைச் சேர்ந்த இடிஹெச் சூரிச்சின் ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர்.

ஏற்கனவே எலெக்ட்ரானிக் கழிவுகளிலிருந்து தங்கத்தை பிரித்தெடுப்பதற்கான முறைகள் இருந்தாலும் இந்த புதிய முறையில் ஒரு அமெரிக்க டொலர் செலவு செய்தால், 50 அமெரிக்க டொலர் மதிப்புள்ள தங்கம் கிடைக்கும் என்று கூறியுள்ளனர். எலெக்ட்ரானிக் கழிவுகளிலிருந்து தங்கத்தைப் பிரிக்க புரோட்டின் ஸ்பான்ஜ், சீஸ் தயாரிக்கும்போது கிடைக்கும் துணைப் பொருட்களைப் பயன்படுத்துகின்றனர்.

**கழிவில் இருந்து தங்கம், எப்படி சாத்தியமானது?**

ஆய்வில், 20 பழைய கம்யூட்டர் மதர்போர்டுகளிலிருந்து உலோக பாகங்களை அகற்றி, அமிலத்தில் கரைத்து, அதன்பின் தங்க அயினிகளை ஈர்க்க ஒரு புரத ஃபைபர் ஸ்பான்ஜை கரைசலில் வைத்தார்கள். தங்க இழைகள் உடனே அதில் வந்து ஒட்டிக் கொள்கின்றன. மற்ற உலோகங்களும் இதில் ஒட்டிக் கொண்டாலும், தங்கம் அதிக அளவில் சேர்கிறது.

வெறும் 20 பழைய கம்ப்யூட்டர் மதர்போர்டுகளில் இருந்து 450 மில்லிகிராம் தங்கத்தை எடுத்துள்ளனர். கிடைக்கப்பெற்ற தங்கத்தில் 22 காரட்டுக்கு ஒத்த அளவில், 91 சதவிகிதம் தங்கம் மற்றும் மீத அளவு செம்பு இருந்துள்ளது. இந்த முழு செயல்முறைக்கான மூலப்பொருள்களின் செலவுகள், ஆற்றல் செலவுகளை ஒப்பிடுகையில் தங்கத்தின் மதிப்பு 50 மடங்கு அதிகமாக இருந்துள்ளது.

இது குறித்து ஆய்வில் பங்கேற்ற பேராசிரியர் ரஃபேல் மெசெங்கா கூறுகையில், இதில் உண்மை என்னவென்றால், எலெக்ட்ரானிக் கழிவுகளிலிருந்து தங்கத்தைப் பெற நாங்கள் உணவுத் துறையின் துணைப் பொருளைப் பயன்படுத்துகிறோம். அதைவிட நிலையான பொருளை நீங்கள் பெற முடியாது என்று தெரிவித்துள்ளார்.

# பாம்புத் தோட்டம் பார்க்க படையெடுக்கும் சுற்றுலாப் பயணிகள்

சமூக வலைத்தளங்களில் வைரலாகி வரும் இந்த தோட்டத்தின் வீடியோக்களை பார்த்து அனைவரும் இது உண்மையா என்று ஆச்சரியமாக கேட்டு வருகின்றனர்.

பெரும்பாலான மக்களுக்கு இதுபோன்ற தோட்டம் இருப்பது குறித்து தெரியாது அல்லவா?

பயண மோகம் எல்லோரிடமும் வந்துவிட்டது. பயண பிரியர்கள், வித்தியாசமான இடங்களைத் தேடி தேடி சென்று புதுவிதமான அனுபவங்களைப் பெற்று வருகின்றனர்.

அந்த வரிசையில் இணைந்திருக்கிறது பாம்புத் தோட்டம்.

மக்கள் இதனை ஆர்வமுடன் கண்டு ரசித்து வருகின்றனர்.

எங்கே இருக்கிறது இந்த இடம்?

வியட்நாம் நாட்டில் தான் இந்த அரிய வகை தோட்டம் உள்ளது. இந்த தோட்டத்தில் உள்ள மரங்களில் பழங்களோ காய்கறிகளோ இல்லை, மாறாக பாம்புகள் இருக்கின்றன.

மரத்தின் கிளைகளில் பாம்புகள் மட்டுமே நிறைந்துள்ளன.

dong tam என்ற பண்ணைத் தோட்டத்தில் தான் பாம்புகள் வளர்க்கப்படுகின்றன.

மற்றப் பண்ணைகளில் பழங்கள் மற்றும் காய்கறிகள் விளைவிப்பது போல, இங்கு பாம்புகள் வளர்க்கப்படுகின்றன.

இங்கு 400 இற்கும் மேற்பட்ட விஷப்பாம்புகள் இருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

அவற்றின் விஷத்தில் இருந்து மருந்துகள் தயாரிக்கப்படுகின்றன. இதனுடன், அவைகளின் விஷத்தை குறைக்க ஆன்டிடோக்களும் தயாரிக்கப்படுகின்றன.

பாம்புக்கடிக்கு பயனுள்ள மாற்று மருந்துகளை உருவாக்க தினசரி பரிசோதனைகளை நடத்துகிறது. குறிப்பிடத்தக்க வகையில், பண்ணையில் காணப்படும் பெரும்பாலான பாம்பு இனங்களின் விஷம் மருந்துகளாக மாற்றப்படுகிறது.

டோங் டாம் பாம்புப் பண்ணைக்கு ஆண்டுதோறும் லட்சக்கணக்கான சுற்றுலாப் பயணிகள் வருகை தருகின்றனர்.

மரக்கிளைகளை அலங்கரிக்கும் பாம்புக்களின் அசாதாரண காட்சியைக் கண்டு கவருகிறார்கள். இந்த பண்ணை பார்வையாளர்களுக்கு இடமளிக்க பல்வேறு வசதிகளை வழங்குகிறது.

சமூக வலைத்தளங்களில் வைரலாகி வரும் இந்த தோட்டத்தின் வீடியோக்களை பார்த்து அனைவரும் இது உண்மையா என்று ஆச்சரியமாக கேட்டு வருகின்றனர்.

இந்தத் தோட்டம் ஆராய்ச்சி நோக்கத்திற்காக உருவாக்கப்பட்டது. ஆனால் இன்று மிகப் பெரிய சுற்றுலாத் தலமாக இது மாறிவிட்டது.

12 ஹெக்டேயர் பரப்பளவில் அமைந்துள்ள இந்த பண்ணைத் தோட்டத்தில் பல வகையான வசதிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

டாங் டாம் பாம்புப் பண்ணையில் ஆண்டுதோறும் சுமார் 1,500 பேர் பாம்புக்கடியால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெறுகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைக் கலசம்



## பேசப்படாத பெண்ணியம்

தாய்மை அடையாத பெண்ணிற்கு
மலடி எனும் பட்டமாம்
ஆனால், தந்தை எனும்
பதவி இல்லாதவனை
அழைக்க சமூகத்தில் பட்டமே இல்லையாம்.
ஓர் பெண் வறுமையில்
வழிதவறினால் அவள் விலைமாது
எனும் பெயர் கொண்டாளாம்
அப் பெயரை அவளுக்கு அளிக்க
காரணமான ஆண்களிற்கு
எப்பெயரும் இல்லையாம் இப் பூமியிலே
கணவன் இறந்தால் மனைவி
விதவையாகின்றாள்- ஆனால்
மனைவி இறந்தால் கணவன்
எனும் பதவி நிலைக்க
மறுமண வைபோகம் ஆரம்பமாம்
அனைத்திற்கும் பெண்களையே
முடக்கும் முட்டாள்கள் நிறைந்த
சமூகத்திலே தான் இன்னும் வாழ்கின்றோம்
பெண்களுக்கு கை பிடித்து வழிகளை
நீங்கள் யாரும் காட்ட வேண்டாம்
கைகளை விடுவித்து வழி விட்டால்
போதும்.. நாமும் சிறகடிக்க!

தயாளன் ஜானிகா,
சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகம், கிழக்குப் பல்கலைக் கழகம்.

## மகாவம்சம் கூறுவதைக்கேள்

எங்கெங்கும் சிங்களமே சீண்டுகின்றது தமிழ்
எங் கெங்கும் அமைதி காத்து நிலை எடுத்தது
அங்குலமும் நாமிழந்து போவதற்கில்லை
பொங்கு தமிழ் பூச்சொரிந்து வாழ்ந்து நிற்குது.

பானி யோடு வந்தவர்க்கு இடமளித்தது தமிழ்
வாழ் விழந்து போவார்க்கும் வாழ் வளித்தது.
ஏழ் கடலும் எம் தமிழே ஆண்டு வந்தது புத்தன்
வாழ் விடத்தை விட்டுவிட்டு இங்கு ஏன் வந்தான்?

எங்கள் தமிழ் தனை இழந்து வாழின்
பொங்கி அனல் சொரிந்து அழிவு நிலமாகும்
பொங்கு தமிழ் பொங்கி எழ வைத்துவிட வேண்டாம்
சங்காரம் காண்பதற்கு வழிகாண வேண்டாம்.

புத்த னவன் போதனைகள் என்ன சொன்னது? மொழி
அத்தனைக்கும் அன்புகாட்டி வாழ வைத்தது
சித்தமிலா சிங்களத்து சீடர் சிலரால் இங்கு
புத்த நெறி சிதைந்தழிய வைத்து விடாதீர்

மகாவம்சம் சிங்களத்தின் மூத்த முதல் நூல் அது
கண்டகாட்சியும் களமும் பின்னரானதே
விசயனுக்கு இடமளித்து வாழ வைத்தவள் தமிழ்
குவேனி என்று மகாவம்சம் கூறுவதைக் கேள்.

வளவை வளவன்

## மௌனத்தின் தேடல்-710



### ஒளி விளக்கு

கற்கை நன்றே.கற்கை
நன்றே பிச்சை புகினும்
கற்கை நன்றே எனும்
வாக்கிற்கமைய-நீ
யாசிக்க ஓடாது கல்வியை
நேசித்து ஒடு
கப்பல் கரை சேர
வழிகாட்டும் கலங்கரை
விளக்குப் போல் உன்
வருங்கால வாழ்வியலுக்கு
வழிகாட்டி ஒளிரச் செய்யும்
ஒளிவிளக்கே கல்வி.

சி.மகாலட்சுமி, கொக்குவில்.

### பெருமாளும் அனுமாரும்

பசித்த சிறுவன் பசியாறும் போது
உணவுத் தட்டைப் பறிப்பது யார்?
பிச்சை எடுத்தாராம் பெருமாள்
அதைத் தட்டிப்
பறித்தாராம் அனுமார்
என்பது போலல்லவா இருக்கிறது.

பி.மதுஷ்சன், தையிட்டி.

### உன்னால் முடிந்தால்

ஓடிக் கொண்டிருக்கும் உலகில்
ஓயாமல் தேடிக் கொண்டிருக்கும்- மனிதா
ஏங்கும் மக்கள் மத்தியில்
எதை கொடுத்தாலும் ஈடு செய்ய முடியாது
உன்னால் முடிந்தால்
மற்றவருக்கு கொடுக்கும் தானம்
உணவாக இருக்கட்டும்.

ஆ.லக்ஷ்மி, வவுனியா.

### உயிரும் உணவும்

இது ஏழையின் சிரிப்பில்
இறைவனைக் காணும் செயல்
அறு சுவை உணவுகள்
விருந்துகளில் இடம் பெற்றாலும்
வறுமைக் கோட்டில் வாழ்வோருக்கும்
வெகு அருமையாய்க் கிடைப்பதுண்டு
மறுபுறத்தில் உண்டி கொடுத்தோர்
உயிர் கொடுத்தவராகின்றனர்.

க.நாகராசா, புணாவில்

### நீயும் உயர்வாய்

கருவுற்றுப் பிள்ளை கால்பதித்த போதில்
ஒருவேளை சோற்றுக்கு உலவுதே வீதியில்
விரும்பிய வாழ்வை விதியும் மாற்றிட
தெருவிலே தேடுகிறது தெவிட்டாத இன்பம்
வருமோ உணவென வாசலிலே காக்கும் பிஞ்சே
உருக்கம் கொண்டமனம் உதவிடுமே உனக்காக
பருவம் மாறிட பாதையும் மாறிட
நெருடல் கொண்ட நெஞ்சம் நோகுதே
குருகுலம் உனக்கு கொடுத்திடும் அறிவால்
பெருமைகள் பெற்று பேருவகை கொள்வாய்.

தயாழினி சிவானந்தன்.

### உணவுத் தட்டு உவகை தருகிறது

தட்டு நிறைவாக உணவுகள் விதம் விதமாக
சிறுவன் முகத்திலே களங்கமற்ற உவகை
ஒருநேரம் பசியாற உணவு கிடைக்கிறது
மறுநேரம் எங்கே தேடுவது உணவை
தம்பி !உனக்கு எதிர்காலம்
உண்டு வளமான வருவாயில்
பலருக்கும் உணவளிக்கும்
மகானாக நீ மிளிர திடமாக உறுதி கொள்...

அபி இலம்ரலிகா, சித்தன்கேணி.

## மௌனத்தின் தேடல்- 711



அன்பு வாசகர்களே உங்கள் மனதில் தோன்றும் கவிதை, வியாசர் பதில்களை ஆசிரியர் மௌனத்தின் தேடல், வலம்புரி- சங்குநாதம், [illegible] வீதி, யாழ்ப்பாணம். எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# களம் பல கண்ட யாழ் கோட்டை



06 செங்கை ஆழியான்

கடலை நோக்கிய அரண் சுவரின் இரண்டு பெரிய கொத்தளங்களில் மும் மூன்று பீரங்கிகள் பொருத் தப்பட்டிருந்தன. 'ப' வடி வச் சிறு புடைப்புக் கொத் தளத்தில் மூன்று பீரங் கிகள் நிறுத்தப்பட்டிருந் தன. இந்தத் தென்னரண் சுவரின் ஒன்பது பீரங்கி களின் தாக்குதல்களுக்குத் தப்பி, எந்த எதிரிக்கல மும் கோட்டையை அணு கிவிடமுடியாது என ஒலி வேறா நம்பி இறுமாந்தான்.

மேற்குப்புற அரண்சு வரில் ஐந்து பீரங்கிகள் பொருத்துவதற்கான வெளி களும், வடபுற அரண்சுவ ரில் நான்கு பீரங்களிகள் பொருத்தக்கூடிய வெளி களும் காணப்பட்டன. கிழக்குப் புற அரண் சுவர் பத்து பீரங்கிகளை கொண்டு இருந்தது. இக் கிழக்குப் புறமே தரைப்புறமான கோட்டை வாயிலைக் கொண் டிருந்து. கோட்டை யைச் சுற்றி ஒருபுறம் கட லும், ஏனைய மூன்று பக்கங்க ளும் 20 அடி அகலமான அகழியைக் கொண்டிருந் தன. ஓர் இணைப்புப் பாலம் தேவைக்கேற்ப இறக்கி, தூக் கக்கூடிய விதமான கிழக்கு அகழிக்கும் கோட்டை வாயி லிற்க்கும் இடையிலிருந்தது.

கிழக்கு அரண்சுவரில் காவற்கோபுரங்கள் ஆறு அமைக்கப்பட்டிருந்தன. துப்பாக்கி ஏந்திய வீரர்கள் தரைப்புறமான கோட்டை வாயிலை எதிரிகளணுகாது காக்க இவை உதவின. கோட் டையினுள் காமாந்தோர், கப்பித்தான், வேன்ட்றிக்ஸ், கூப்மன்ஸ், ஒண்ட கூப் மன்ஸ், பிரிடிக்கன்ஸ் முத லான போாத்துக்கேய அதி காரிகளின் மாளிகைகள் அமைந்திருந்தன.

கத்தோலிக்க தேவால யம், படைவீரர் பாசறைகள் என்பனவும் அமைந்திருந் தன. கடல் நீரை அகழிக் குள் வெகு பக்குவமாக விட் டிருந்தார்கள். கடலிலிரு ந்து அகழிக்குள் எவரும் நுழைந்து விடாதிருக்கப் பலமான கம்பிக்கிறாதி களைத் தடுப்பிட்டிருந்தார் கள்.

மொத்தத்தில் போர்த் துக்கேயரின் யாழ்ப்பாணக் கோட்டை பலமும் கம்பீர மும் கொண்ட அதியற்புத மான கட்டமைப்பைக் கொண் டிருந்தது. பிலிப் தே ஒலி வேறா திருப்தியுடன் புன்ன கைத்தான். மாதிரி வடிவத் தின் படி கட்டிமுடிக்குமாறு கட்டளை பிறப்பித்தான். இது பத்தேவியாவிலுள்ள ஒல் லாந்தக் கோட்டையிலும் பார்க்கப் பெரியது' எனப் பின்னர் பால்தேயஸ் சுவாமி கள் வியக்கப்போகிறார்.

கோட்டை கட்டும் செயற் பாடு ஆரம்பமானது. வரு டத்தில் ஒன்பது மாதங் களுக்குக் கோட்டை கட்டும் பணி நடந்தது. அகழியில் வெட்டிய மண்ணை அரண் சுவர்களுள் நிரப்பினர். மழை பெய்யத் தொடங்கி யதும் கோட்டை கட்டுகி ன்ற பணி நிறுத்தப்படும். கோடை காலத்திலே ஏற்பட்ட வைசூரியும், மாரி காலத்தி லேற்பட்ட பேதிநோயும் சில வேளைகளில் கோட்டை கட்டுவதைத் தடை செய் தன. (தொடரும்...)

# கடல் புறா

## நிதிப் பெட்டியா? சதிப்பெட்டியா?




சேந்தன் முகத்தில் பெரும் சோகம் மண்டிக் கிடந்தது. பரிதா பம் மிக்க விழிகளை அவன் அமீர் மீது திருப்பினான். அமீரின் முகத்தில் எந்தவித உணர்ச் சியும் இல்லாதிருக்கவே மீண் டும் இளையபல்லவன் மீது கண் களைத் திருப்பிய கூலவாணிகன் சேந்தன், "சென்ற ஒரு வருட காலத்தில் நாம் சேமித்த அத் தனை செல்வமும் அந்த ஆறு பெட்டிகளில் இருக்கின்றன" என்று சுட்டிக்காட்டினான்.

"தெரியும் எனக்கு," என்றான் இளையபல்லவன்.

"அத்தனையும் கோட்டைக் குள் சென்றால் திரும்பி வருமா?"

"வந்தாலும் வரலாம். வரா விட்டாலும் இல்லை."

"அப்படிச் சொத்து முழுவதை யும் பறிகொடுப்பது விவேகமா?"

"இதைவிடப் பெரிய சொத்து ஆபத்திலிருக்கிறது."

"இதைவிடப் பெரிய சொத்தா?"

"ஆமாம்"

"அப்படி என்ன சொத்தோ அது?"

"உயிர் எனும் சொத்து" என்று கூறிய இளைய பல்லவன்? "உயிர் இருந்தால் இதைவிட அதிகம் சம்பாதிக்கலாம். உயிர் போய் விட்டால் இவை இங்கிருந்துதான் என்ன பயன்?" என்று கேட்டான்.

உயிரைவிடச் செல்வத்தை அதிக மாக ஆயுள் முழுவதும் மதித்து வந்த கூலவாணிகனுக்கு அத்தனை பொக்கிஷத்தையும் கோட்டைக்கு மாற்ற இஷ்டமில்லையென்றாலும் வேறு வழியின்றிப் படைத்தலை வன் சொற்படி நடக்கத் தீர்மானித் தான். அத்துடன் மந்திராலோ சனை முடிவுற்றது என்பதைக் குறிப்பிடத் தலையை அசைத்த இளையபல்லவன், அறையை விட் டுத் தளத்துக்குச் சென்று மீண்டும் நீண்ட நேரம் கோட்டையைக் கவனித்தான். கோட்டையின் காவல் வழகத்துக்கு அதிகமாகப் பலமாயி ருந்தது. கோட்டைமதில்கள் மீது முதல் நாளை விட அதிக வீரர்கள் நடமாடியதைக் கவனித்த இளைய பல்லவன் மிகுந்த திருப்பியுடன் தலையை அசைத்துக் கொண்டான். 'காவல் நேற்றுக் காலையை விட இன்று காலை பலமாக இருக்கிறது. காரணம் என்னிடம் உள்ள பயம் தான். பயம் இருக்கிற இடத்தில் பலவீனமும் இருக்கிறது. அந்தப் பலவீனத்தை நான் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்' என்று தனக்குள் சொல்லிக்கொண்ட இளையபல்லவன் மீண்டும் தன் அறைக்குச் சென்று கோட்டைக்கு செல்ல ஆயத்தமா னான்.

அடுத்து நாலைந்து நாழிகைக் ளுக்குள் இளையபல்லவன் கூல வாணி கனுடனும் ஆறு பெரும் மரப் பெட்டிகளுடனும் அவற்றைத் தூக்க முடியாமல் தூக்கிய பத்துப் பதி னைந்து மாலுமிகளுடனும் பட கொன் றில் இறங்கிக் கரையை நோக்கிச் சென்றான். படகு கரையை அடை ந்ததும் தான் இறங்கிப் பெட்டிகளைக் கீழே இறக்கச்சொன்ன இளைய பல்லவன், மாலுமிகளைப் பெட்டிகளைத் தூக்கிவரச் சொல்லிக் கூலவாணிகன் பின் தொடரக் கோட்டையை நோக்கி நடந்தான்.

நாழிகைகள் ஓடிவிட்டதால் கதிரவன் கொடுமை அதிகமாகிப் பெரும் உஷ்ணக் காற்று கடற் கரையில் வீசிக் கொண்டிருந்தது. அந்த உஷ்ணக் காற்றையும் சகிக்கும் மணலையும் லட்சியம் செய்யாத கொள்ளையர் ஆங்கா ங்கு கும்பல் கூடி இளையபல்ல வனையும் அந்தப் பெரும் மரப் பெட்டிகளையும் வியப்புடன் கவ னித்துக் கொண்டிருந்தார்கள். அந்தப் பெரும் பெட்டிகளையும் அதன் பலமான இருப்புத் தாழ்க ளையும் பார்த்தும் பெட்டிகளில் இருப்பது என்னவென்பதைப் புரிந்துகொண்ட கொள்ளையர், இளையபல்லவனின் செய்கைக் குக் காரணம் தெரியாமல் விழித் தனர். கப்பலிலிருந்த அத்தனை செல்வத்தையும் இளையபல் லவன் கோட்டை மாளிகைக்குக் கொண்டு செல்கிறானென்பதை உணர்ந்துகொண்ட கொள்ளை யர் பலவர்மனின் கையில் சிக்கும் அந்தப் பெட்டிகள் மீண்டும் இளைய பல்லவனின் மரக்கலத்துக்கத் திரும்பாதென்பதை உணர்ந்து இத்தனை செல்வத்தையும் ஏன் பறிகொடுக்கிறான் இவன்?" என்று எண்ணிப் பரிதாபத்துடன் படைத் தலைவனையும் பெட்டி களையும் பார்த்தார்கள்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நித்திலம் தொகுத்து வழங்கும்'

# சுகமான விடியல்

394

வலம்புரியின் மருத்துவச்சுடர்

## அன்பு ஆரோக்கியத்தின் திறவு கோல்

அன்பு உடல், உள, சமூக ஆரோக்கியத்தின் அடிநாதமாய், திறவுகோலாய் எங்கும் வியாபித்து நிற்கின்றது. மனம் அன்பு மயமாகி நிற்கும் பொழுது ஏற்படும் அளவு கடந்த ஆறுதலும் அமைதியும் மனிதனுக்கு பேராற்றலையும், துல்லியமாகச் செயற்படும் திறனையும், நோய்களை எதிர்க்கும் வல்லதையும் வழங்கி நிற்பதாக ஆய்வுகள் சுட்டிக் காட்டி நிற்கின்றன. இறைவன் அன்பு மயமானவன் என்று சொல்லுவார்கள். அதனாலேயே அவன் சர்வவல்லமையும் பொருந்தியவனாக விளங்குகின்றான்.

மனச்சஞ்சலங்களே பலநோய்களுக்கு வித்திடுகின்றன. இந்த மனச்சஞ்சலங்களை அகற்றும் அருமருந்தாய் அன்பு மிளிர்கிறது.எம் மீதும் எமது குடும்பத்தின் மீதும் அன்பு கொள்வோம். எமது சுற்றம், உறவுகள், நண்பர்கள் அனைவர் மீதும் அன்பு கொள்வோம். ஊர், தேசம், மொழி, கலை, கலாசாரம் அனைத்தின் மீதும் அன்பு கொள்வோம். உலாவி வரும் உயிர்களிலும் இயற்கையிலும் அன்பு கொள்வோம். இந்த அன்பினால் ஏற்படும் மன அமைதி உடலின் நோய் எதிர்ப்பு படைபலத்தைப் பெருக்கும் பேராயுதமாக அமையும் என்பதில் சந்தேகமில்லை.

எம்மை வெறுப்பவர்களிடமும் அன்பு வைக்கும் மனவலிமையை வளர்த்துக் கொள்வது இலகுவான காரியமல்ல. அதே சமயம் அது முடியாத விடயமுமல்ல. எம்மைப் பிறர் வெறுப்பதற்குக் காரணம் என்ன? நாம் பிறரை வெறுப்பதற்குக் காரணம் என்ன? எமது எதிரியாக நாம் கருதிக் கொள்பவர்களிடம் புதைந்து கிடக்கும் அன்பு ஊற்றை அடையாளப்படுத்திக் கொள்ள என்ன செய்யலாம்? வெறுப்புத்தான் அன்பினதும் ஆரோக்கியத்தினதும் எதிரி என்று தெரிந்து அதனை ஏன் வளர்த்துக் கொள்ள முயலுகிறோம்? தெரிந்தும் ஏன் பிழையான திசையில் செல்ல முனைகிறோம்.

மனிதர்கள் அனைவரும் அடிப்படையில் அன்புமயமானவர்கள் தான். அன்பு இல்லாத மனிதர்கள் யாரும் இருக்க முடியாது. எம்மைப் பலர் வெறுப்பதற்கும், நாம் பலரை வெறுப்பதற்கும் அடிப்படையாய், காரணமாய் இருப்பது என்ன என்பதை நாமே அறிந்துகொள்வது இலகுவான காரியமல்ல. ஆனால் இந்த வெறுப்புணர்வுதான் அன்பினதும் ஆரோக்கியத்தினதும் முதல் எதிரி என்பதை நாம் ஏற்றுக் கொண்டுதான் ஆக வேண்டி இருக்கிறது.

எதிரியிலும் அன்பு கொண்டு மன்னித்து எமது பாதையைத்தற்காத்து தடம் மாறாது பயணிக்கும் மனத்திடத்தை வளர்த்துக் கொள்வது உடல், உள, சமூக நன்னிலையான, உண்மையான ஆரோக்கியத்துக்கு வழி சமைக்கும்.

கோபமும், வெறுப்பும், பகை உணர்வும் ஒருவனின் ஆற்றலையும், ஆளுமையையும், வளர்ச்சியையும், மகிழ்ச்சியையும் பாதித்து நிற்கும் ஒரு பொது எதிரியாக வர்ணிக்கப்படுகின்றது. இந்தப் பொது எதிரியானவன் எமது பொன்னான நேரத்தின் பெரும் பகுதியையும் விழுங்கி ஏப்பம் விட்டு விடுகின்றான். இந்த எதிரியை அன்பு என்ற அஸ்திரம் கொண்டு தாக்கி அழிப்பது ஒரு இலகுவான போர் அல்ல. பல தடவைகள் நாம் அந்த போரில் தோற்று விடுகிறோம். ஆனாலும் இந்தத் தோல்விகள் நிரந்தரமானவையல்ல என்பதை மனதில் நிறுத்தி அன்பு என்ற அம்பைக் கொண்டு அந்தப் பொது எதிரி மீது இலக்கு வைப்போம்.

அன்பு என்னும் பேராயுதத்தை சரியான முறையில் கையாளக் கற்றுக்கொண்டால் நாம் பல தொற்று நோய்களையும் வாழ்வின் தடைகளையும் வெற்றி கொண்டு சுகமான விடியலை நோக்கிப் பயணிக்க முடியும்.

மதங்களினதும் மருதுவத்தினதும் அடிப்படைத் தத்துவம் "அன்பு, பரிவு, ஒருவனுக்கு உண்மையான சுகத்தையும் நலத்தையும் கொடுப்பது" என்ற அடிப்படையில் ஒன்றுபடுவதை நாம் அறிவோம். மருத்துவம் ஒருவனுக்கு இந்தப் பிறப்பிலே அன்பும் ஆதரவும் சுகமும் நலமும் கொடுப்பதைப்பற்றி சிந்திக்கிறது. செயலுருவம் கொடுக்கத் துடிக்கிறது.


ஆனால் மதங்கள் இம்மையிலும் மறுமையிலும் அவனின் உடலினதும் ஆன்மாவினதும் சுகம் பற்றியும் நலன் பற்றியும் சொல்லி அதற்கான வழியைக் காட்டி நிற்கின்றன.

உண்மையான ஆன்மீகமும் அறிவியலும் இரு துருவங்கள் அல்ல. ஒருவனுள் இருந்து துடித்துக் கொண்டிருக்கும் நம்பிக்கைச் சுடரே ஒரு ஆரோக்கியமான விடியலைக் கொடுக்கின்றது.

Dr. சி. சிவன்சுதன்,
பொது வைத்திய நிபுணர்,
போதனா வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.

## ஆய்வுகளின் முடிவின் படி.....

பழங்களை தினமும் உண்டு வந்தால் வகை 2 நீரிழிவு எனப்படும் நீரிழிவு நோய் வருவதற்கான ஆபத்து குறைகிறது என ஆய்வு ஒன்று காட்டுகிறது. அதேநேரம் பழச்சாறு குடிக்கும் வழக்கம் இருப்பவர்களுக்கு வகை 2 நீரிழிவு வருவதற்கான ஆபத்து அதிகரிக்கிறது என ஆய்வாளர்கள் கண்டறிந்துள்ளனர்.



அதிகளவில் மாசடைந்த வாயுவை சுவாசிக்க நேரிடுகின்ற கர்ப்பிணிப் பெண்களின் குழந்தைகள் ஆட்டிஸம் நோயினால் (மன வளர்ச்சிக் குறைபாடு) பாதிக்கப்படும் அபாயம் பெருமளவில் உள்ளதாக அமெரிக்காவில் நடந்துள்ள ஆய்வொன்றில் தெரிய வந்துள்ளது. இயற்கையான சுத்தமான காற்றை சுவாசித்து வருவது நமது உடலை பல நோய்களிலிருந்து பாதுகாக்கும் என்பது யாவரும் அறிந்ததே.

மாரடைப்பிலிருந்து மீண்டு வந்த நான்காயிரத்திற்கும் அதிகமான மக்களிடம் ஹார்வர்ட் பல்கலைக்கழகத்தின் பொதுச் சுகாதாரப்பிரிவு ஆய்வு நடத்தியது. அதில் மாரடைப்பிலிருந்து மீண்டு வந்தவர்கள் அதிக நார்ச்சத்து மிகுந்த உணவுகளை உட்கொண்டால் அவர்கள் நோயால் பாதிக்கப்பட்டு 9 வருடங்களுக்கு பிறகும் ஆரோக்கியமாக உயிர் வாழ்கிறார்கள் என்று கண்டறியப்பட்டுள்ளது. நார்ச்சத்து, பெரும்பாலும் அதிகமாக பழங்களிலும் காய்கறிகளிலும் மற்றும் முழு தானியங்களிலும் காணப்படுகிறது என்பதும், அது குடலுக்கு மிகவும் நல்லது என்பதும் ஏற்கனவே எல்லோரும் அறிந்த ஒரு விடயம்.

நித்திலம்

பலருக்கு பயன்படக்கூடிய ஆரோக்கியம் சம்பந்தமான அல்லது உளவியல் சமூக மேம்பாடு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களை (thamilhealth@gmail.com) என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். அதற்கான எமது பதில்கள் இங்கு பிரசுரிக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொலைபேசிகளில் பரப்பப்படும் போலி குறுஞ்செய்திகள்

### அவதானத்துடன் செயற்படுமாறு மக்களுக்கு எச்சரிக்கை

(கொழும்பு)

கைத்தொலைபேசி பாவனையாளர்கள் தினசரி உபயோகத்தின் போது பல்வேறு வகையான குறுஞ்செய்திகள் தொடர்பில் அவதானமாக செயற்படுமாறு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கைத்தொலைபேசிகளுக்கு வரும் சில தனிப்பட்ட குறுஞ்செய்திகளில் சில இணைப்பின் மூலம் உங்களின் தனிப்பட்ட தகவல்களைப் பெறுவதற்கான மோசடி நடவடிக்கை இடம் பெறுவதாகவும் எச்சரிக்கப்பட்டுள்ளது.

இந்த செய்திகளில் வரும் இணைப்புகள் உங்களை ஏமாற்றும் வகையில் சில பரிசுத் தொகையை வெல்வது அல்லது வேலை வாய்ப்பை வழங்குவது என்ற போர்வையில் இடம்பெறுவதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளது. இவ்வாறான இணைப்புகளை கிளிக் செய்வதைத் தவிர்க்குமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும், சில சந்தர்ப்பங்களில் இந்த இணைப்பைக் கிளிக் செய்வதன் மூலம் உங்கள் கையடக்க தொலைபேசியில் ஒரு போலி மென்பொருள் நிறுவப்படும் வாய்ப்பு உள்ளதாகவும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

# ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளராக களமிறங்கத் தயார்

### சம்பிக்க தெரிவிப்பு

(கொழும்பு)

அரசியல் கூட்டணியொன்று எதிர்காலத்தில் மலரவுள்ளது எனவும் அதன்மூலம் பொது வேட்பாளராக களமிறங்குமாறு கோரிக்கை விடுத்தால் அதனை ஏற்பதற்கு தயார் எனவும் ஐக்கிய குடியரசு முன்னணியின் தலைவர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்

சமகால அரசியல் நிலவரம் தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், ஜனாதிபதித் தேர்தல் தான் தற்போது நடத்தப்பட வேண்டும். பொதுத்தேர்தலை முதலில் நடத்துவதற்கு எவராவது முற்பட்டால் அது வெளி நாட்டுக் கடன் மறுசீரமைப்பு விவகாரத்தால் தாக்கம் செலுத்தும்.


வெளிநாட்டுக் கடனை மறுசீரமைப்பை எதிர்வரும் ஜூலை மாதத்துக்குள் செய்தாக வேண்டும். ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் பொதுத்தேர்தலை நடத்தலாம்.

ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளராக களமிறங்குமாறு எனக்கு இன்னும் கோரிக்கை விடுக்கப்படவில்லை. எதிர்காலத்தில் கூட்டணி அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும். அந்த கூட்டணி கோரிக்கை விடுத்தால் பொதுவேட்பாளராக களமிறங்க தயார் என தெரிவித்துள்ளார். (நி-5)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | நெல்லியடி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 140 | 100 | 100 | 80-100 | 140 |
| உருளைக்கிழங்கு | 180 | 180 | 150 | 150 | 180 |
| பச்சைமிளகாய் | 200 | 200 | 150 | 150-200 | 200 |
| தக்காளி | 100 | 80 | 100 | 80-100 | 140 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 130 | 100 | 80-120 | 200 |
| கோவா | 200 | 140 | 200 | 200 | 240 |
| கரட் | 300 | 350 | 400 | 300 | 400 |
| பூசணி | 150 | 120 | 150 | 100 | 140 |
| புடோல் | 150 | 150 | 180 | 100 | 100 |
| வாழைக்காய் | 200 | 120 | 120 | 100 | 180 |
| சின்ன வெங்காயம் | 350 | 300 | 300 | 180-320 | 280 |
| பெரிய வெங்காயம் | 550 | 580 | 550 | 350 | 650 |
| பாகற்காய் | 350 | 250 | 300 | 250 | 240 |
| வெண்டைக்காய் | 200 | 120 | 120 | 100-150 | 240 |
| கருணைக் கிழங்கு | 100 | 140 | 100 | -- | 150 |
| பயற்றங்காய் | 150 | 150 | 100 | 100-150 | 120 |
| லீக்ஸ் | 250 | 250 | 300 | 250 | 300 |
| பீற்றூட் | 250 | 120 | 200 | 220 | 250 |
| கறிமிளகாய் | 300 | 250 | 300 | 250-300 | 350 |
| முருங்கைக்காய் | 600 | 800 | 600 | 300-550 | 800 |
| போஞ்சி | 200 | 200 | 200 | 170 | 200 |
| கத்தரிதம்புள்ள | 100 | 60 | 100 | -- | 100 |
| கீரை - 1 பிடி | 120 | 120 | 50 | 40-60 | 100 |
| தேசிக்காய் | 300 | 350 | 350 | 200-380 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 130 | 120 | 100 | 50-120 | 80-120 |
| இராசவள்ளி | 400 | 450 | 400 | -- | 400 |
| வெங்காயப்பூ | -- | 200 | 200 | -- | 400 |
| முள்ளங்கி | 80 | 100 | 120 | 80 | 100 |
| பொன்னாங்காணி | 80 | 120 | 80 | 80 | 50 |
| வல்லாரை | 60 | 40 | 50 | 100 | 80 |
| ஈரப்பலா | 80 | -- | 100 | 80 | |

# இன்று ஒரு தகவல் 87



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## சாலை பாதுகாப்பு

எனக்குத் தெரிந்த ஒருவர் ஸ்கூட்டர் வைத்திருக்கிறார். ஒவ்வொரு நாளும் அதை எடுத்துக் கொண்டு வெளியிலே கிளம்பும் போது ஒரு எலுமிச்சம் பழத்தை அதன் சக்கரத்தின் அடியிலே வைத்து காவு கொடுத்துவிட்டுத்தான் புறப்படுவார். அப்படி ஒரு நம்பிக்கை! எதற்கு சார் இப்படி என்று கேட்டேன். என்ன சார் விபரம் தெரியாத ஆளாக இருக்கிறீர்கள்? இந்தக் காலத்திலே ஒரு வாகனத்தை எடுத்துக்கொண்டு வெளியிலே கிளம்பினால் திரும்பி வரும் வரைக்கும் விபத்து ஏதும் இல்லாமல் வந்து சேரணுமே! அதற்காகத் தான் இப்படி செய்கின்றேன் என்றார்! இப்படி சொல்லிவிட்டு ஹெல்மெட்டை எடுத்துத் தலையிலே போட்டுக் கொண்டு போய்விட்டார்.

அவர் அப்படி நினைப்பதிலே தப்பு இல்லை! நாகரிகம் வேகமாக வளர்ந்து கொண்டு இருக்கின்றது. போக்குவரத்தும் அதிகரித்துக் கொண்டே வருகின்றது. அதே வேகத்திலே சாலையின் அகலமும் வசதியும் அதிகரித்துக் கொண்டா இருக்கிறது? இல்லையே 10 பேர் நடந்து கொண்டிருந்த அதே வீதியிலே 100 பேர் நடந்தால் ஒருவருக்கொருவர் மோதிக் கொண்டு சாரி சொல்லிக் கொண்டு தான் போக வேண்டியிருக்கும் வேற வழி இல்லை!

இதே வேகத்திலே போய்க் கொண்டிருந்தால் இனிமேல் நடக்கின்றவர்களும் ஹெல்மெட்டை போட்டுக் கொள்ள வேண்டும் என்னும் சட்டம் வந்தாலும் வந்து விடும். அவர்களும் தினம் ஒரு எலுமிச்சம் பழத்தை மிதித்து விட்டு வெளியிலே கிளம்புற மாதிரி ஆகிவிடும்! என்ன செய்யிறது?

சாலை வசதி அதிகரிக்க வேண்டும்!

சனப் பெருக்கம் குறைய வேண்டும்!

தேவையில்லாத பிரயாணங்களையும் குறைக்க வேண்டும்!

இவையெல்லாம் ஒரு பக்கம் இருந்தாலும் இப்போது உள்ள நிலைமையிலே முக்கியமாக நாம் செய்ய வேண்டியது. சாலை விதிகளை அனுசரித்து நடக்க வேண்டும்.

முக்கியமாக வாகனம் செலுத்துபவர்கள் சில பாதுகாப்பு முறைகளை மனதிலே வைத்துக்கொண்டால் எவ்வளவோ விபத்துக்களைத் தவிர்க்கலாம்.

இந்த விடயத்தில் மிகவும் அனுபவப்பட்ட ஒருவர் சில குறிப்புக்களைக் கொடுத்து இருக்கின்றார். வாகனம் செலுத்துபவர்கள் மனதிலே வைத்துக் கொள்வது நல்லது. சொல்லுவது சாதாரணமாகத் தெரியலாம். ஆனாலும் ரொம்ப முக்கியமான குறிப்புகள். அவர் பத்துக் குறிப்புகள் சொல்லி இருக்கிறார்.

முதலிலே வாகனம் செலுத்துபவர்கள் ஒவ்வொருவரும் மற்றைய வாகனம் செலுத்துபவருக்கு போக்குவரத்து சட்ட திட்டங்கள் எதுவும் தெரியாது அதனாலே நாம தான் கவனமாக செலுத்த வேண்டும் என்று மனதிலே நினைத்துக் கொள்ளுங்கள்.

இரண்டாவது- எப்போதும் இரண்டு கைகளையும் ஸ்டீரிங்வீல் மேலே வைத்துக் கொண்டு செலுத்த வேண்டும். சில பேர் வலது கையை ஸ்ரைலாக கதவு மேலே வைத்துக் கொண்டு போவார்கள். திடீரென குறுக்கே ஏதாவது வந்து விட்டால் வண்டியை திருப்புவதற்கு போதுமான பலம் இல்லாமல் போய் விடும்.

மூன்றாவது- எதிரிலே பார்வையை மறைக்கக் கூடிய அளவிற்கு பெரிதாக வண்டியோ பஸ்ஸோ நின்று கொண்டிருந்தால் அதைக் கடந்து போவதற்கு முன்னர் ஒலி எழுப்பி கொண்டு ஜாக்கிரதையாக மெதுவாகப் போக வேண்டும்.

நான்காவது- பகலிலே இன்டிக்கேட்டரை போடக் கூடாது. இது இரவு நேரத்திலே போடுவதற்காக. பகலிலே இன்டிக்கேட்டர் கை தான்.

ஐந்தாவது- சாலை சந்திகளிலே திரும்பும் போது நீங்கள் என்ன தான் சிக்னல் காட்டினாலும் பின்னாலே ஏதாவது வண்டி வருகிறதா என்று பார்த்துக் கொள்ளுங்கள்.

ஆறாவது- வேகமாக போய்க் கொண்டிருக்கும் போது திடீரென பிறேக் போட வேண்டாம்.

ஏழாவது- ஆடு மாடு வீதியிலே நிற்கின்றதா? கிட்டப் போய் திடீரென ஒலி எழுப்பக் கூடாது. அது மிரண்டு போய் வண்டி மேலேயே வந்து விழும்.

எட்டாவது- இன்னொரு வண்டியைக் கடக்கும் போது உரசிக்கொண்டு போற மாதிரி போகக் கூடாது. இடைவெளி முடிந்த அளவுக்கு தாராளமாக இருக்க வேண்டும். அதற்காக ரொம்பவும் தாராளமாக விலகிப் போக வேண்டாம். ஏனெனில் இன்னொரு ஓரத்திலே புளியமரம் நின்று கொண்டு இருக்கும்.

ஒன்பதாவது- எதிர் எதிராய் வரும் இரண்டு வண்டிகள் கடக்கிற போது கிட்ட நெருங்குற சமயத்திலே வேகத்தைக் குறைக்க வேண்டும்.

பத்தாவது- இரவு நேரத்திலே போய்க் கொண்டிருக்கும் போது எதிரிலே வருகின்ற வெளிச்சத்தைக் குறைக்கட்டுமே என்று பார்த்துக் கொண்டிருக்கக் கூடாது. முதலிலே நாம் குறைத்து விட்டு வண்டி கடந்து போன பின்பு வெளிச்சத்தை அதிகரித்துக் கொள்ளலாம்.

இந்தப் பத்துக் குறிப்பும் சாதாரணமாகத் தெரியலாம். இருந்தாலும் பல விபத்துக்களை பார்த்த அனுபவத்திலிருந்து தொகுக்கப்பட்ட குறிப்பு இது. எல்லாவற்றிற்கும் மேலே வண்டியை சரியான கண்டிசனில் வைத்திருக்க வேண்டும். வண்டியை செலுத்துவோரும் சரியான கண்டிசனில் இருக்க வேண்டும்.


ஒரு கலியாணக் கோஷ்டியை அழைத்துக் கொண்டு போவதற்கு வண்டி தயாராக இருந்தது. ட்ரைவர் வந்து சேரவில்லை. கூட்டத்திலே இருந்த ஒருத்தர் எனக்கு பேருந்து ஓடத் தெரியும் என்றார். சரி என்று எல்லோரும் ஏறி உட்கார்ந்தார்கள். இவரும் மெதுவாக அவர்கள் போக வேண்டிய இடத்திற்கு கொண்டு போய் சேர்த்து விட்டார். எல்லோரும் இறங்கிய பின் ஒருத்தர் மெதுவாக வந்து அந்த பேருந்து ஓடியவரிடம் வந்தார். ரொம்ப நன்றி எங்களைப் பத்திரமாக கொண்டு வந்து சேர்த்து விட்டீர்கள். இது சரி நீங்கள் ட்ரைவிங் செய்து கொண்டு வரும் போது வழி முழுவதும் உங்கள் காலுக்கு அடியிலே குனிந்து எதையோ தேடின மாதிரி தெரிந்ததே என்றார். ஆமாம் பிறேக் எது என்று தேடிக் கொண்டு இருந்தேன். கடைசி மட்டும் தண்டுபிடிக்கவில்லை. பரவாயில்லையே அது தான் வந்து சேர்ந்திட்டோமே என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகை அச்சுறுத்தும் மற்றுமொரு வைரஸ்! அமெரிக்காவில் கண்டறிவு

(வோஷிங்டன்)

**கொரோனாவை விட 100 மடங்கு ஆபத்தான பறவைக் காய்ச்சலின் 'எச்5 என்1' வைரஸ் அமெரிக்காவில் கண்டறியப்பட்டுள்ளது.**




இந்த வைரஸ் பரவ ஆரம்பித்தால், கொரோனா தொற்று காரணமாக உயிரிழந்தவர்களை விட பல மடங்கானோர் உயிரிழக்க நேரிடுமென எச்சரிக்கப்பட்டுள்ளது.

இது மக்கள் மத்தியில் பதற்றத்தையும் அச்சத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

கடந்த 2020 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் உலகம் முழுவதும் பேரழிவை ஏற்படுத்திய கொரோனா தொற்று நோயிலிருந்து, உலகம் இன்னும் மீளவில்லை.

இந்த நிலையில், விஞ்ஞானிகள் மற்றொரு தொற்றுநோய் குறித்து எச்சரிக்கத் தொடங்கியுள்ளனர். இதன்படி, பறவைக் காய்ச்சல் தொற்று நோய்க்கான சாத்தியம் குறித்து நிபுணர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

கொரோனா காலத்தில் மக்களுக்கு ஏற்பட்ட நெருக்கடியை விட, இந்த தொற்று நோய் மிகவும் பேரழிவை ஏற்படுத்தும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

பறவைக் காய்ச்சலின் 'எச்5 என்1' வகை வைரசானது மிகவும் தீவிரமானது எனவும், அதன் மாதிரிகள் பசு, பூனை, மனிதர்கள் உள்ளிட்ட பாலூட்டிகளிடம் இருப்பதாக கூறப்பட்டுள்ளது.

மேலும், அமெரிக்காவின் டெக்சாஸ் மாகாணத்தில் உள்ள பால் பண்ணையில் பணிபுரியும் ஒருவருக்கு, இந்த 'எச்5 என்1' வைரஸ் பாதிப்பு இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருகையில், குறித்த நபர் பறவைக் காய்ச்சலால் பாதிக்கப்பட்டிருக்கலாமென அச்சம் வெளியிடப்பட்டுள்ளது.

தற்போது அவருக்கு வைரஸ் தடுப்பு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. டெக்சாஸின் பார்மர் கவுண்டியில் சுமார் 1.6 மில்லியன் முட்டையிடும் கோழிகள் மற்றும் 337 ஆயிரம் குஞ்சுகள் பறவைக் காய்ச்சலால் பாதிக்கப்பட்டதாகக் கண்டறியப்பட்டுள்ளது.

இதனால் குறித்த பண்ணையில் இருந்த அனைத்து உயிரினாங்களும் அழிக்கப்பட்டுள்ளன.

அத்துடன், தற்போது பறவைக் காய்ச்சல் அபாயம் இல்லை எனவும், இந்த நிலை தொடர்பில் தொடர்ந்தும் கண்காணிக்கப்பட்டு வருவதாக அமெரிக்க கால்நடை பராமரிப்புத் துறை கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

---

## இஸ்ரேலுக்கு ஆயுத விற்பனை நிறுத்துமாறு ஐ.நா தீர்மானம்

### 28 நாடுகள் ஆதரவாக வாக்களிப்பு

(ஜெனீவா)

இஸ்ரேலுக்கான அனைத்து ஆயுத விற்பனையையும் நிறுத்துமாறு ஐ.நா. மனித உரிமைகள் பேரவை வலியுறுத்தியுள்ளது.

இதற்கான தீர்மானம் நேற்றுமுன்தினம் நிறைவேற்றப்பட்டது. 47 நாடுகள் அங்கம் வகிக்கும் இப்பேரவையில் 28 நாடுகள் தீர்மானத்துக்கு ஆதரவாக வாக்களித்தன. 6 நாடுகள் எதிராக வாக்களித்தன. 13 நாடுகள் வாக்களிப்பில் பங்குபற்றவில்லை.

காசா யுத்தத்தினால் 33,000 இற்கும் அதிகமானோர் கொல்லப்பட்டுள்ள நிலையில் இனப்படுகொலை அபாயம் உள்ளதை சுட்டிக் காட்டி இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இஸ்லாமிய ஒத்துழைப்புக்கான அமைப்பின் சார்பில் பாகிஸ்தான் இப்பிரேரணையை முன்வைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

## இந்தியாவிற்குள் ஊடுருவிய தீவிரவாதிகள் கைது

(டில்லி)

இந்தியாவில் பயங்கரவாதத் தாக்குதல் நடத்துவதற்காக நேபாளம் வழியாக இந்தியாவிற்குள் ஊடுருவிய பாகிஸ்தானைச் சேர்ந்த இருவர் உள்ளிட்ட மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த மூவரும், உத்தரப் பிரதேசத்தில் வைத்து மாநில பயங்கரவாத தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்இவர்கள் ஐ. எஸ்.ஐ உதவியுடன் நேபாளம் வழியாக இந்தியாவிற்குள் ஊடுருவி, தாக்குதல் நடத்த திட்டமிட்டுள்ளதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

கைது செய்யப்பட்டவர்களில் முகமது அல்தப் பட், சையத் கஜன்பர் ஆகியோர் பாகிஸ்தானைச் சேர்ந்தவர்கள் எனவும், நசீர் அலி காஷ்மீரின் ஸ்ரீநகரைச் சேர்ந்தவர் எனவும் தெரியவந்துள்ளது.

முகமது அல்தப் பட், ஐ.எஸ்.ஐ, உதவியுடன் ஹிஸ்புல் முஜாகிதீன் பயங்கரவாத அமைப்பினரிடம் பயிற்சி பெற்றவர் என உத்தரப்ள பிரதேச பயங்கரவாத தடுப்பு பிரிவு அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். (நி-6)

---

# சூரிய ஒளி மீண்டும் விண்வெளிக்கு பூமியை குளிரவைக்க புது முயற்சி

(வோஷிங்டன்)

கடந்த ஆண்டு(2023) பூமி தனது அதிகமான வெப்பத்தை பதிவு செய்ததோடு, வரும் காலங்களில் பூமியில் பதிவாகும் வெப்பம் மேலும் மேலும் அதிகரிக்கும் என கூறப்படுகிறது.

அதன்காரணமாக பூமியின் வெப்பத்தை குறைப்பதற்கு ஆய்வாளர்கள் பல்வேறு ஆய்வுகளை மேற்கொண்டு வருகின்றனர்.

அதன்படி சூரியனில் இருந்து வரும் சில கதிர்களை மீண்டும் விண்வெளிக்குத் திருப்பி அனுப்புவதற்கான கிளவுட் ப்ரைட்டனிங் என்ற முறையை அமெரிக்க ஆய்வாளர்கள் முன்மொழிந்துள்ளதாக தெரியவந்துள்ளது.

இந்த திட்டமானது, மேகங்களைப் பிரகாசமாக்கும் ஒரு முக்கிய தொழில்நுட்பமாகும். இதனால் மேகங்கள் சூரிய ஒளியின் ஒரு சிறிய பகுதியை மீண்டும் விண்வெளிக்கே திருப்பி அனுப்பிவிடும்.

அத்தோடு இந்த ஆய்வினால் பூமியின் ஒரு பகுதி வெப்பம் கணிசமாகக் குறையும். இந்த தொழில்நுட்பம் முழுமையாக வெற்றி அடைந்தால் அது மிகப்பெரிய திருப்புமுனையாக இருக்கும் என கூறப்படுகிறது.

வோஷிங்டன் பல்கலைக்கழக ஆய்வாளர்களினால் கடந்த ஏப்ரல் 2 ஆம் திகதி ஆய்வொன்றும் இது தொடர்பில் நடத்தப்பட்டுள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

அத்துடன், இது வெற்றியடைந்தால் பூமியின் வெப்பத்தை இது கணிசமாகக் குறைக்கும். இருப்பினும், இது நிச்சயம் தற்காலிகமான தீர்வாகவே இருக்கும் என்று ஆய்வாளர்கள் மிகத் தெளிவாகக் கூறியுள்ளனர். (நி-6)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேன்மைக்குரிய அனைத்துச் சாதனைகளும் ஊக்கத்தினாலும் இடையறாவாகவும் செய்யப் பட்டவையே. – ஜேம்ஸ் ஆலன்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## இந்தியத் தேர்தல் களத்தில் உச்சம் பெறும் கச்சதீவு

இந்தியப் பொதுத் தேர்தலுக்கான பிரசாரம் காட்டுத் தீ போல பரவி வருகிறது.

பிரதமர் மோடியின் ஆட்சியை எப்படியும் வீழ்த்த வேண்டும் என்பதில் எதிர்க்கட்சிகள் கங்கணம் கட்டி நிற்கின்றன.

இஃது ஒருபுறமிருக்க, நடைபெறப் போவது இந்தியப் பொதுத் தேர்தலாயினும் தேர்தல் பிரசாரங்கள் மாநிலத்துக்கு மாநிலம் வெவ்வேறு வடிவங்களில் நடந்தாகின்றன.

சுருங்கக்கூறின் இடம், பொருள், ஏவல் அறிந்து அதற்கேற்றாற்போல தேர்தல் பிரசார வியூகங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இதில் தமிழகத் தேர்தல் களத்தில் இம்முறை கச்சதீவு விவகாரம் சூடுபிடித்துள்ளது.

ஆம், தமிழகத்தில் ஆட்சியில் இருக்கும் திராவிட முன்னேற்றக் கழகம், பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான பாரதிய ஜனதாக் கட்சி வெற்றி பெற்று விடுமோ என்ற ஏக்கத்தில் பிரதமர் மோடியை எதிர்ப்பதில் அதிதீவிரம் காட்டி வருகிறது.

அதேநேரம் பாரதிய ஜனதா கட்சியின் மாநிலத் தலைவர் அண்ணாமலை தனது கட்சிக்காக, தமிழகம் முழுவதிலும் பிரசாரப் பணியில் ஈடுபட்டுள்ளார்.

தவிர, பிரதமர் நரேந்திர மோடி அவர்களும் தமிழகத்துக்கு அடிக்கடி விஜயம் மேற்கொண்டு பிரசாரப் பணியில் ஈடுபட்டு வருகிறார்.

நிலைமை இதுவாக இருக்கையில், தமிழகத் தேர்தல் களத்தில் கச்சதீவு விவகாரமே பேசுபடு பொருளாகியுள்ளது.

ஆம், நாங்கள் மீண்டும் ஆட்சிக்கு வந்தால் கச்சதீவை மீட்டெடுப்போம் என பாரதிய ஜனதாக் கட்சி தனது தேர்தல் பிரசாரத்தில் உறுதிபடக் கூறிவருகிறது.

அதேநேரம் காங்கிரஸ் கட்சியே கச்சதீவை இலங்கைக்குத் தாரை வார்த்தது என்ற குற்றச்சாட்டையும் பாரதிய ஜனதாக் கட்சி முன்வைக்கிறது.

அதாவது கச்சதீவை காங்கிரஸ் இலங்கைக்குத் தாரைவார்த்தபோது, தமிழகத்தில் கலைஞர் கருணாநிதி முதலமைச்சராக இருந்தார்.

இருந்தும் கச்சதீவை இலங்கைக்கு ஒப்படைப்பது தொடர்பில் அவர் தனது எதிர்ப்பை வெளிக்காட்டவில்லை என்ற விடயத்தையும் பாரதிய ஜனதா கட்சி உரக்கக்கூறி வருகிறது. இதனால் முதல்வர் மு.க.ஸ்டாலின் மிரண்டு போயுள்ளார்.

அதேசமயம் 10 ஆண்டுகள் ஆட்சியில் இருந்த மோடிக்கு இப்போதுதான் கச்சதீவு ஞாபகத்துக்கு வந்ததா என திராவிட முன்னேற்றக் கழகத்தினர் சரமாரியாகக் கேள்விக் கணை தொடுத்துள்ளனர்.

எது எவ்வாறாயினும் 1974ஆம் ஆண்டு கச்சதீவு இலங்கையிடம் கையளிக்கப்பட்டது. இன்று 50 ஆண்டுகள் நிறைவுற்ற நிலையில், கச்சதீவை திரும்பப் பெற்றுக் கொள்வதன் மூலமே தமிழக மீனவர்களின் பாதுகாப்பு உறுதி செய்யப்படும் என்பதான நிலைப்பாடு இந்திய அரசியலில் பொதுக் கருத்தாக உள்ளது. இதனால், இலங்கையிடம் இருந்து கச்சதீவு கைநழுவிப் போகின்ற வாய்ப்பு உண்டு என்று ஊகிப்பதில் தவறில்லை.

## கிராம உத்தியோகத்தர்களின் கொடுப்பனவுகளை அதிகரிக்க தீர்மானம்

(கொழும்பு)

கிராம உத்தியோகத்தர்களின் கொடுப்பனவுகளை அதிகரிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர் அசோக பிரியந்த தெரிவித்துள்ளார்.

புத்தளம் மாவட்ட பிரதேச செயலாளர்களின் முன்னேற்ற மீளாய்வு தொடர்பான விஷேட கலந்துரையாடலில் கலந்து கொண்டபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதன்படி, கிராம அலுவலருக்கு வழங்கப்பட்ட அலுவலக கொடுப்பனவு மற்றும் எழுதுபொருள் கொடுப்பனவு இம் மாதம் முதல் பின்வருமாறு திருத்தப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

மேலும், மாதாந்த அலுவலக கொடுப்பனவு மாநகர சபை அல்லது நகர சபை பிரதேசத்தில் ரூபா 3000 ஆகவும் பிரதேச சபை பகுதியில் 2000 ரூபாவாகவும் திருத்தப்பட்டுள்ளது.

மேலும், ஆண்டுக்கான எழுதுபொருள் உதவித் தொகை 3000 ரூபாவாக மாற்றியமைக்கப்பட்டுள்ளது. கிராம உத்தியோகத்தர்களின் கொடுப்பனவுகளை வழங்குவது தொடர்பாக நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கைக்கு அமைச்சர் சபையின் அங்கீகாரமும் கிடைத்துள்ளதாக அசோக பிரியந்த மேலும் குறிப்பிட்டுள்ளார். (நி-6)

## மசகு எண்ணெய் விலையில் மாற்றம்

(வோஷிங்டன்)

சர்வதேச சந்தையில் மசகு எண்ணெயின் விலை நேற்று அதிகரிப்பை பதிவு செய்துள்ளது. உலக சந்தையில் WTI ரக மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை 86.91 அமெரிக்க டொலராக அதிகரிப்பை பதிவு செய்துள்ளதாக தகவல் தெரிவிக்கின்றது. அத்துடன் பிரெண்ட் ரக மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை 91.17 அமெரிக்க டொலராக காணப்படுகிறது. இந் நிலையில், உலக சந்தையில் இயற்கை எரிவாயுவின் விலை 1.78 அமெரிக்க டொலராக அதிகரிப்பை பதிவு செய்துள்ளதாக கூறப்படுகிறது. (நி-6)

## ஓமந்தையில் ரயிலுடன் கப்ரக வாகனம் மோதல்
### ஒருவர் படுகாயம்

(வவுனியா)

வவுனியா ஓமந்தைப் பன்றிக்கெய்தகுளம் பகுதியில் அமைந்துள்ள பாதுகாப்பற்ற புகையிரதக் கடவையில் நேற்று சனிக்கிழமை இடம்பெற்ற விபத்தில் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் வவுனியா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

குறித்த விபத்து தொடர்பாகத் தெரியவருகையில்,

அநுராதபுரத்திலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிச் சென்று கொண்டிருந்த ரயில் ஓமந்தைப் பன்றிக் கெய்தகுளம் பகுதியில் கடவையினை கடக்க முற்பட்ட கப்ரக வாகனத்துடன் மோதியதில் குறித்த விபத்து இடம் பெற்றது.

விபத்தில் கப் ரக வாகனம் கடுமையான சேதமடைந்ததுடன், அதன் சாரதி படுகாயமடைந்த நிலையில் வவுனியா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

விபத்தில் ரயிலின் முன் பகுதியும் சேதமடைந்துள்ளது. இதனையடுத்து பய ணிகள் இறக்கப்பட்டு மற்றொரு புகையிரதத்தில் ஏற்றி அனுப்பிவைக்கப்பட்டனர்.

விபத்து தொடர்பாக ஓமந்தைப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

குறித்த பாதுகாப்பற்ற புகையிரதக் கடவையில் சிலவருடங்களுக்கு முன்பு இடம் பெற்ற விபத்தில் நான்குபேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

## பிரமந்தனாறு படுகொலை தொடர்பில் அறுவர் கைது; மூவர் தலைமறைவு

(தருமபுரம்)

கிளிநொச்சி தருமபுரம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பிரமந்தனாறு பகுதியில் கடந்த வியாழக் கிழமை குடும்பஸ்தர் ஒருவர் குத்திப் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய 6 சந்தேக நபர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந் நிலையில் கைதான சந்தேக நபர்கள் 6 பேரையும் கிளிநொச்சி நீதிமன்றில் நேற்று முன்தினம் முற்படுத்திய வேளை அவர்களை 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இச்சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் மூவர் தலைமறைவாகியுள்ள நிலையில் அவர்களை கைது செய்யும் நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாக தருமபுர பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்தார். (நி-6-316)

## பாலஸ்தான விஞ்ஞாபனம்

(யாழ்ப்பாணம்)

தொல்புரம்-உடையார்வளவு ஸ்ரீ மஹாசக்தி அம்பாள் தேவஸ்தான பாலஸ் தாபன விஞ்ஞாபனம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 5.57 மணி தொடக்கம் 7.22 வரையான சுபவேளையில் விநாயகர் முதலான பரிவார மூர்த்திகளுக்கு பாலஸ்தான கும்பாபிஷேகம் இடம் பெறவுள்ளது என ஆலய நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (நி-6)

## பண்டிகை காலத்தை முன்னிட்டு வர்த்தக நிலையங்களில் திடீர் சோதனை

(கொழும்பு)

நாட்டில் பண்டிகைக் காலம் நெருங்கி வருகின்ற நிலையில் நுகர்வோரின் பாதுகாப்பினை உறுதிப்படுத்தும் வகையில் வரத்தக நிலையங்களில் திடீர் சோதனை நடவடிக்கையினை சுகாதார வைத்திய அதிகாரிகள் முன்னெடுத்துள்ளனர்.

இந்நிலையில் தெற்கின் முக்கிய வர்த்தக நகரமாக காணப்படுகின்ற அக்குரஸ்ஸ நகருக்கு திடீர் சோதனையை முன்னெடுத்திருந்த சுகாதார வைத்திய அதிகாரி காலாவதியான பொருட்களை விற்பனை செய்த 22 வர்த்தக நிலையங்களுக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளனர்.

இதேவேளை நாடளாவிய ரீதியில் நேற்று முன் தினத்தில் மாத்திரம் 51 வர்த்தக நிலையங்கள் மற்றும் 22 உணவகங்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

இதேவேளை சதொச விற்பனை நிலையங்களில் முட்டைக்கு தேவையான வெப்ப நிலையில் முட்டைகள் பாதுகாக்கப்படவில்லை என்றும் சுகாதார வைத்திய அதிகாரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர். (நி-6)

ஜனாதிபதித் தேர்தலில்

## போட்டியிடுவது குறித்து இதுவரை தீர்மானமில்லை

### ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவது குறித்து இறுதித் தீர்மானம் எடுக்கவில்லை என தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

பொதுஜன பெரமுனவின் ஸ்தாபகரும் முன்னாள் அமைச்சருமான பசில் ராஜபக்ஷவுடனான சந்திப்பின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி இல்லத்தில் நடந்த சந்திப்பின் போது முதலில் பொதுத் தேர்தலை நடத்துவது நாட்டுக்கு நன்மை பயக்கும் என பசில் ராஜபக்ஷ வலியுறுத்தியுள்ளார்.

எதிர்வரும் தேர்தல்கள் மற்றும் சமகால அரசியல் நிலைமை குறித்து இதன் போது கலந்துரையாடப்பட்டுள்ளது.

இலங்கையின் அரசியல் அனுபவத்தின் பிரகாரம் தற்போது பொதுத் தேர்தல் ஒன்று நாட்டுக்கு சாதகமானதாக அமையும். இல்லையேல் பாதகமான சூழ்நிலை உருவாகலாம் என பசில் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்வரும் ஜூன் மாதம் ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதில் ரணில் விக்கிரமசிங்க தீவிரமாக உள்ளார். ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் களமிறங்கவுள்ளதாக சில வாரங்களுக்கு முன்னர் ரணில் விக்கிரமசிங்க அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 18 கிலோ கஞ்சாவுடன் ஒருவர் கிளிநொச்சியில் கைது

(முறிகண்டி)

நேற்று முன்தினம் இரவு கிளிநொச்சியில் 18 கிலோ கஞ்சாவுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மன்னாரில் உள்ள போதை ஒழிப்பு விசேட பிரிவினருக்கு கிடைத்த தகவலிற்கு அமைவாக கிளிநொச்சி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பொன்னகர் பகுதியில் முன்னெடுக்கப்பட்ட சோதனை நடவடிக்கையின் போதே குறித்த கைது சம்பவம் இடம்பெற்றது.

இதன்போது 18 கிலோ 470 கிராம் கஞ்சா குறித்த சந்தேக நபரிடம் இருந்து மீட்கப்பட்டுள்ளதுடன் சந்தேக நபரையும் சான்றுப் பொருட்களும் கிளிநொச்சி பொலிஸ் காவலில் உள்ள நிலையில் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (ரி-6-100)





மருதமடு அன்னையின் திருச்சொரூபம் மன்னாரிலிருந்து வெள்ளாம்குளம் ஊடாக யாழ். பேராலயத்திற்கு சனிக்கிழமை எடுத்து வரப்பட்டது. யாழ். மறைமாவட்டத்திற்கு நேற்று சனிக்கிழமை எடுத்து வரப்பட்ட திருச்சொரூபம் யாழ்ப்பாணம், தீவகம், இளவாலை, பருத்தித்துறை, கிளிநொச்சி, முல்லைத்தீவு மறைக் கோட்டங்களின் பங்குகளுக்கும் எதிர்வரும் 30 ஆம் திகதி வரையில் திருச்சொரூபம் எடுத்து வரப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (படம்: சிவசாந்தன்)


சிவபூமி முதியோர் இல்லம்

சுழிபுரம்

17 ஆவது ஆண்டு நிறைவு விழா

காலம்

07.04.2024 (இன்று ஞாயிற்றுக்கிழமை) மாலை 4.00 மணிக்கு

இடம்

சிவபூமி முதியோர் இல்லம்

"பாலசந்திரன் அரங்கு"

தலைவர்

கலாநிதி.ஆறு.திருமுருகன்

(தலைவர்-சிவபூமி அறக்கட்டளை)

வரவேற்புரை

திரு.ம.தயாகரன்

(இணைச் செயலர்-சிவபூமி அறக்கட்டளை)

ஆசியுரை

ஆன்மீகச்சுடர் ரிஷி.தொண்டுநாதன் சுவாமிகள்

(முதல்வர்-சுப்ரமணிய கோட்டம்)

பிரதம விருந்தினர்

திரு.ந.விஜயசுந்தரம் தம்பதிகள்

(பிரதம ஆசிரியர்-வலம்புரி பத்திரிகை)

இசை நிகழ்ச்சி

"நெறியாள்கை"

திருமதி.வி.நரேந்திரா

நடன ஆற்றுகை

"நெறியாள்கை"

திருமதி.ஸ்ரீதேவி கண்ணதாசன்

(சந்திர பரத கலாலயம், பொன்னாலை)

நன்றியுரை

திரு.பு.ஸ்ரீவிக்னேஸ்வரன்

(செயலாளர்-சிவபூமி அறக்கட்டளை)

அனைவரும் வருகைதந்து சிறப்பிக்குமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

சிவபூமி முதியோர் இல்லம், தொல்புரம், சுழிபுரம் 021 321 4230

சிவபூமி அறக்கட்டளை, இலங்கை 021 222 7938


## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3083

### லாலீஷா

ஏன்டா பழைய கம்பெனியில இருந்து வேலையை விட்டுட்டாய்
காலையில 9 மணிக்கு ஆபிஸ் போன வீட்டுக்கு வர நைட் 10, 11 மணி ஆகிடுது
Family கூட டைம் spend பண்ணவே முடியல
ஆமா இப்ப எங்க வேலை செய்யிறாய்?
துபாய் இல



### துவாகரன்

"பசியில்" பத்து ரூபாய் திருடினால் அவன் குற்றவாளி



ஆனால் "பதவியில்" பல கோடி திருடினால் அவன் அரசியல்வாதி...

### அனோஜிதா

லவ் பண்றது இரண்டு மாசம்
அதை நினைச்சு ஒப்பாரி வைக்கிறது இரண்டு வருசம்



இடையின் ஏன் என்னைப் பிரிந்தாய் உயிரே என்று status வேற

### றியின்



தொப்பை இல்லாத ஒவ்வொரு slim ஆன கணவருக்கும் பின்னாலும் சமைக்க தெரியாத ஒரு மனைவி இருக்கிறாள்.

### சப்திகா

அம்மா வீட்டுல செய்ய முடியாதுன்னு சொன்ன வேலை எல்லாம்



கணவர் வீட்டுல சிரிச்சிட்டு செய்வோம் பாருங்க அப்ப தெரியும் ஒரு ஒளிவட்டம்

### யானுசன்

விபரம் தெரியாத போது இவர் மட்டும் தான் நடிகர் திலகம் என்று நினைச்சிட்டு இருந்தோம்



போகப் போகத் தான் தெரிஞ்சது. நம்மள சுத்தி எல்லாருமே நல்லா நடிக்கிற நடிகர் திலகம் என்று

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## ஜனாதிபதி...

அறுவடை செய்யப்பட்ட நெல்லின் முதற் பகுதியை ஜய ஸ்ரீ மஹா போதிக்கு காணிக்கையாக செலுத்தும் வருடாந்த புத்தரிசி விழா, ஜனாதிபதி தலைமையில் இடம்பெற்றது.

தேசிய புத்தரிசி விழாவின் நினைவுப் பதிப்பும் ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டது. (ம-7)

## நாட்டின்...

நெருக்கடிக்கு முகங்கொடுக்க நேரிட்டதாக சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, மீண்டும் அவ்வாறானதொரு நிலை ஏற்படாதிருக்க பாரம்பரிய அரசியலில் இருந்து விடுபட வேண்டும் எனவும் தெரிவித்தார்.

நேற்று அநுராதபுரம் மாவட்ட சட்டத்தரணிகளுடன் இடம்பெற்ற சந்திப்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நாட்டின் தேவைக்கேற்ப கட்சி அமைப்பை மாற்றி அமைக்க வேண்டும். கட்சி அமைப்பின் விருப்பப்படி நாட்டைக் கட்டியெழுப்ப முடியாது.

அதைச் செய்யப் போனதால்தான் கடந்த காலங்களில் பல சவால்களை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. அதனை யாரும் பொறுப்பேற்கவில்லை. கடைசிவரை யாரும் ஆட்சி அமைக்க முன்வரவில்லை.

இது குறித்து முக்கிய கட்சிகள் ஒன்றுகூடி கலந்துரையாடுவது நல்லது என்று நான் நம்புகிறேன். பழைய கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி ஆகியவற்றின் அடிப்படையில் கிராமங்கள் கட்டியெழுப்பப்பட்டன.

ஆனால் தற்போது பல புதிய கட்சிகள் உருவாகியுள்ளன. அடுத்த தேர்தலில் இதெல்லாம் மாறலாம். கட்சிகளைப் பற்றி சிந்திக்காமல் நாட்டைப் பற்றி சிந்திக்க வேண்டும். இல்லையேல் பிரிவுதான் ஏற்படும் என்றார். (ம-7)

## 2028 வரை...

தெரிவித்துள்ளது.

இலங்கையில் சீனாவின் செல்வாக்கு அதிகரிப்பதை தடுப்பதற்காக ஜப்பான் உட்பட உலக நாடுகள் முயற்சிகளை மேற்கொண்டுள்ள நிலையிலேயே இந்தப் பேச்சுவார்த்தைகள் இடம்பெறுவதாக நிக்கேய் ஏசியா தெரிவித்துள்ளது.

கடன்வழங்கிய நாடுகளுடன் பேச்சுவார்த்தைகள் முடிவடைந்துவிட்டன. அடுத்த சில வாரங்களில் முழுமையான அறிவிப்பு வெளியாகும் என இலங்கையின் தேசிய பாதுகாப்பு விடயங்களிற்கான ஆலோசகர் சாகல ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

இலங்கை கடன்களை 15 வருடங்களிற்குள் மீளச் செலுத்த வேண்டியிருக்கும் 2028 முதல் 2043ஆம் ஆண்டுக்குள் என தெரிவித்துள்ள அவர், இலங்கை வேண்டுகோள் விடுத்துள்ள போதிலும் கடன்கள் குறைக்கப்படாது எனவும் தெரிவித்துள்ளார்.

இலங்கை 2022 ஏப்ரலில் வெளிநாட்டு கடன்களை மீள செலுத்துவதை தற்காலிகமாக இடைநிறுத்துவதாக அறிவித்திருந்தது.

இதன்மூலம் இலங்கை தன்னை வங்குரோத்து நிலைக்கு உட்படுத்தியது. 2023 ஏப்ரல் கூட்டத்தில் இலங்கைக்கு கடன்வழங்கும் நாடுகள் குழு ஏற்படுத்தப்பட்டது. சீனாவிற்கு பின்னர் இலங்கைக்கு அதிகளவு கடன்களை வழங்கிய நாடான ஜப்பான் இந்தியா பிரான்ஸுடன் இந்த குழுவில் இடம் பெற்றுள்ளது. (ம-7)

## ஐ.எம்.எப்பின்...

குள் 3ஆவது தவணையை எதிர்பார்க்கிறோம். அதுதான் நிலையான நடைமுறை.

கடன் மறுசீரமைப்பிற்கு பின்னர் சர்வதேச நாணய நிதிய அதிகாரிகள் மற்றும் அரசாங்க அதிகாரிகளுக்கு இடையே ஊழியர்கள் நிலை ஒப்பந்தம் உள்ளது. அதைத் தொடர்ந்து, அந்த ஒப்பந்தத்தை முன்வைப்பதற்கான திகதியை சர்வதேச நாணய நிதியம் தீர்மானிக்கும்.

இதற்குப் பிறகுதான் மூன்றாவது தவணையாக 337 மில்லியன் டொலர்களைப் பெறமுடியும். ஆனால் அதற்கு முன் நாம் முடிக்க வேண்டிய பணி ஒன்று உள்ளது.

அதாவது கடனை மறுசீரமைப்பதற்கான ஒருமித்த கருத்தை எமது கடனாளிகளிடமிருந்து பெற்றுக்கொள்ள வேண்டும். எனினும் அனைத்து இருதரப்பு கடன் வழங்குநர்களின் பூர்வாங்க ஒப்புதலைப் பெற்றுள்ளோம் என்றார். (ம-7)

## ஸ்ரீ லங்கா...

வலகத்திற்கு முன்பாக நேற்று போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டிருந்தது.

குறித்த போராட்டத்தில் கலந்துகொண்டபோதே தயாசிறி ஜயசேகர இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

"இந்த அரசாங்கம் சுதந்திரக் கட்சியை எடுத்துக்கொண்டு செல்லவே முயற்சிக்கின்றது.

நான் உட்பட துஷ்மந்த மித்ரபால, முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆகிய பலர் எதிர்க்கட்சியிலேயே இருக்கின்றோம்.

இந்தக் கட்சியை விட்டுச்சென்ற 9 பேர் இன்று அரசாங்கத்துடன் இணைந்து அமைச்சுப் பதவி வகிக்கின்றனர்.

9 பேரின் விருப்பத்துக்கு இந்த கட்சியை நடத்த முடியாது.

நீதிமன்றத்தின் உத்தரவை நாம் மதிக்கின்றோம். ஆனால், அவர்கள் இன்று நாட்டினுடைய நிலைமையை பற்றிச் சிந்திக்க வேண்டும்.

கட்சி என்ற ரீதியில் ஒரு தீர்மானத்தை எடுக்கும் போது, அதனை ஏனைய உறுப்பினர்கள் குழப்புவார்களாக இருந்தால் அதனை எவ்வாறு ஏற்றுக் கொள்ள முடியும். என்றார். (ம-7)

## மோ...

பருத்தித்துறை வீதி ஊடாக சைக்கிளில் பயணித்த குறித்த நபர் புதிய செம்மணி வீதி வழியாக கடக்க முற்பட்ட நிலையில் பின்னால் வந்த மோட்டார் சைக்கிள் மோதியதிலேயே இவ் விபத்து ஏற்பட்டுள்ளது.

இதன்போது, சைக்கிளில் பயணித்த நல்லூரை சேர்ந்த க.மோகன குமார் (வயது 61) என்பவர் படுகாயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளர்.

மேலும், சாரதி அனுமதி பத்திரம் இன்றி மோட்டார் [illegible] செலுத்தி விபத்தை ஏற்படுத்திய 21 வயது இளைஞன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளார்.

இளைஞனை எதிர்வரும் 15ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவு வழங்கப்பட்டுள்ளதாக கோப்பாய் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ம-7)

## வறியவர்களுக்கு...

களைப் பெறாதவர்களுக்கே இந்த உதவி வழங்கப்படவுள்ளது.

பிராந்திய அபிவிருத்திக்காக நிதியமைச்சினால் 20 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (ம-7)

## வர்த்தக...

சோதனை நடவடிக்கையினை சுகாதார வைத்திய அதிகாரிகள் முன்னெடுத்துள்ளனர்.

நாடளாவிய ரீதியில் நேற்று முன்தினம் மாத்திரம் 51 வர்த்தக நிலையங்கள் மற்றும் 22 உணவகங்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

இதேவேளை சதொச விற்பனை நிலையங்களில் முட்டைக்கு தேவையான வெப்பநிலையில் முட்டைகள் பாதுகாக்கப்படவில்லை என்றும் சுகாதார வைத்திய அதிகாரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர். (ம-7)


மஹஜன சம்பத
திகதி 2024.04.06
சீட்டிழுப்பு இலக்கம் 5442
K 3 7 8 0 6 7

அத சம்பத
K 8 0 6 7
சீட்டிழுப்பு இலக்கம் 0017

தன நிதானய
திகதி - 2024.04.06
சீட்டிழுப்பு இலக்கம் - 1472
R 13 24 51 59 R
11288

மெகா பவர்
திகதி 06/04/2024
சீட்டிழுப்பு இலக்கம் 1790
I 22 23 34 46 78
08013

லக்கி 7 VIP
திகதி 2024.04.06
சீட்டிழுப்பு இலக்கம் 0268
J 8 1 2 2 9 5 J

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3684
சீட்டிழுப்பு திகதி 06.04.2024
U 24 27 30 74
U 32509

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.04.06
சீட்டிழுப்பு இலக்கம் 0751
கடகம் 16 38 47 61 கடகம்
29399 10

உத்தியோகபூர்வ முடிவுகள்
06.04.2024 வெற்றி வாரம் 150 வர்ணம் நீலம்
N 1 5 4 4 6 2
D 70850
அடுத்த சுப்பர் ஜக்பொட் 20,212,756.00

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2416 வர்ணம் நீலம் 06.04.2024 சனிக்கிழமை
07 24 25 37 Y
69209
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 82,521,858.40

சனிதா
திகதி 2024.04.06 வெற்றி வாரம் 4577 வர்ணம் இளம் பச்சை
28 39 40 48 W
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.55,457,195.20
69389

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4128 வர்ணம் இள நீலம்
சீட்டிழுப்பு திகதி 2024.04.06 தினம் சனிக்கிழமை
15 22 25 60
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 17,094,071.60
634687

கப்றக
Y 37 09 12 36 59
1592 சிவப்பு 06.04.2024 சனிக்கிழமை
852977
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 516,364,983.00

அட கோடிபதி
சனிக்கிழமை
வெற்றி வாரம் : 2242
சீட்டிழுப்பு திகதி : 2024.04.06
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.104,909,653.60
26 32 61 71 L
171260


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விசா ஆலோசனை துறையில்

வெற்றிகரமான 15 வருட சேவையினை வரவேற்கும் முகமாக(2010-2025)

**WEC கல்லூரி மாணவர்களுக்கு வழங்கும் சிறப்பு சலுகை இதோ!**

APRIL 15 தொடக்கம் AUGUST 15, 2024 வரையான காலப்பகுதியில் IELTS வகுப்புகளுக்கு பதிவுசெய்யும் 03 மாணவர்களுக்கு வெற்றிவாய்ப்பு

"விசா ஆலோசனை,
விசா கட்டணம்,
விமான பயணச்சீட்டு
முற்றிலும் இலவசம்"

*நிபந்தனைக்கு உட்பட்டது

Feb/2025 Intake University admission 100% FREE



நேரடியாக வருகைதந்து இலவச ஆலோசனைகளை பெற்றுக்கொள்ள...

**WEC COLLEGE**
யாழ்ப்பாணம்– 0776421264
சாவகச்சேரி – 0771588218

வெற்றிவாய்ப்பினை குலுக்கல் முறையில் தெரிவுசெய்யும் நிகழ்வு 25/08/2024 காலை10 மணிக்கு நடைபெறும்

(369)

## வேலையாட்கள் தேவை

கொழும்பில் உள்ள நிறுவனத்தில் Computer இல் வேலை செய்வதற்கு O/L வரை படித்துள்ள பெண்கள் தேவை.
சாப்பாடு, தங்குமிடம் போன்றவை உண்டு.

தொடர்புகளுக்கு :
**077 539 3728**

(353)

## விற்பனைக்கு

அரச அங்கீகார முத்திரையிடப்பட்ட நிறுவைத் தராசு வகைகள் 10Kg, 15Kg, 30Kg, 150Kg, 300Kg யாவும் ஒருவருட உத்தரவாதத்துடன் நிதான விலையில் விற்பனைக்குண்டு.

**நந்துலாலா இரும்பகம் யாழ்ப்பாணம்**
**021 222 6234**
**077 780 5950**

(387)

## V2 VISA SERVICES கனடா

077 77 20 322
077 77 19 322
Visit Visas
Air Tickets
• கனடா PASSPORT APPOINMENTS

**விமான பயணச்சீட்டுக்கள்**

- Student Visas
- Online Appointments
- இந்தியா Visas
- Online Visas - All countries
- Police Clearance
- Travel Insurance

**Sri lankan Visa Extention**
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு

(C-0082)

## கொழும்பில் அறைகள், வீடு நாள் வாடகைக்கு

தெகிவளையில் காலி வீதி - PIZZA HUTக்கு முன்பாக குளிரூட்டப்பட்ட அறைகள் மற்றும் வீடுகள் சகல வசதிகளுடனும் நாள், மாத வாடகைக்கு விடப்படும்.

A/C Room - 6000/-இல் இருந்து
வீடு - 12000/-இல் இருந்து

V2 GUEST 0743900360 0743900361

(C-0082)

## காணி விற்பனைக்கு

நாவற்குழி பிரதான வீதியிலிருந்து 200 m (அமிர்தா வீதி) யில் 13 1/2 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. தரகர் தேவையில்லை.

1 பரப்பு 57,5000 ரூபா
விலை பேச்சு வார்த்தைக்கு உட்பட்டது.

**077 012 3075**

(361)

## IELTS CLASSES

கொழும்பு பல்கலைக்கழக ஆசிரியரினால்
**IELTS, A1UK EXAM, ADVANCED GRAMMAR & SPOKEN ENGLISH 30%** *Special offer for all the courses*

- GUARANTEED TO 7.5 in IELTS Exam.
- PASS in UK A1 Exam.
- Exam REGISTRATION CENTER.

(வாழ்க்கைத் துணையுடன் இணைவதற்கான பரீட்சை) A1 UK Exam, IELTS } புதிய பிரிவுகள் ஆரம்பம்

OXFORD ENGLISH ACADEMY, Ariyakulam Junction, Jaffna.
**T.P : 077 780 3970, 074 007 1970**

(19346)

## வேலை வாய்ப்பு

யாழ் நகர் மத்தியில் இயங்கும் பிரபலமான Fancy Shop ஒன்றிற்கு வேலையாட்கள் தேவை.
ஆண்/ பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

- ☐ பகுதி நேர வேலைவாய்ப்பு வசதியும் உண்டு.
- ☐ EPF/ ETF வசதிகளும் உண்டு.

**075 762 2092**

(385)

## SPOKEN ENGLISH WITH GRAMMAR

யாழ் இந்துக் கல்லூரி வீதி

பேச்சுப் பயிற்சிகள்
தனி வகுப்பு ஆண்டு 7 தொடக்கம்
GCE O/L, A/L, பட்டதாரிகள்,
தொழில் புரிவோர்கள்

K.GANESH B.A **077 766 8725**

(363)

## மணப்பெண் தேவை

- ◆ திருகோணமலை, இந்து, கௌரவ குடும்பம், 1993, பூராடம், BSc Engineering, New zealand மணமகனுக்கு மணமகள் தேவை.
- ◆ கொக்குவில், இந்து, கௌரவ குடும்பம், 1985, ரோகினி, Business man, Canada, divorce மணமகனுக்கு மணமகள் தேவை.
- ◆ கரவெட்டி - புங்குடுதீவு, இந்து, கௌரவ குடும்பம், 1986, பூரட்டாதி, Graduate, UK மணமகனுக்கு மணமகள் தேவை.
- ◆ கந்தர்மடம், இந்து, கௌரவ குடும்பம், 1989, உத்தராடம், MSc, Canada மணமகனுக்கு மணமகள் தேவை.
- ◆ தெல்லிப்பளை, இந்து, கௌரவ குடும்பம், 1988, உத்தரம், BSc civil Engineering, USA மணமகனுக்கு மணமகள் தேவை.
- ◆ முல்லைத்தீவு, இந்து, கௌரவ குடும்பம், 1985, உத்தரம், Graduate, Denmark மணமகனுக்கு மணமகள் தேவை.
- ◆ சுருவில், இந்து, கௌரவ குடும்பம், 1987, அச்சுவினி, MSc, Australia மணமகனுக்கு மணமகள் தேவை.
- ◆ பளை, இந்து, கௌரவ குடும்பம், 1984, அவிட்டம், PHD, Divorce, UK Citizen மணமகனுக்கு மணமகள் தேவை.

(317)

www.thaalee.com
✆- 077 539 3728
- 077 803 8193

## இப்பொழுது யாழ்ப்பாணத்தில் SOLA CHEMICAL COMPANY (PVT) LTD

| | | | |
|---|---|---|---|
| கல்சியம் நீக்கி | 4L | ~~2200~~ | 1400 |
| சலைவத் திரவம் | 4L | ~~3200~~ | 1600 |
| ஹான்ட் வோஷ் | 4L | ~~2800~~ | 1600 |
| டிஷ் வோஷ் | 4L | ~~1900~~ | 950 |
| மாபிள் கிளீனர் | 4L | ~~2600~~ | 1400 |
| டொய்லட் கிளீனர் | 4L | ~~2600~~ | 1400 |
| வோஷிங் பவுடர் | 3Kg | ~~1165~~ | 900 |

விசேட விலைக் கழிவு

No.576/2C, Siyambalape road, Heiyanthuduwa, makola.
Reg No. PV00240433
288, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
021 222 0866, 0777 495 494

(370)


## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் திருநெல்வேலி அம்மாச்சி உணவகத்திற்கு முன்பாக 5 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. பிரித்தும் கொடுக்கப்படும். விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். தரகர்கள் தொடர்பு கொள்ள வேண்டாம்.

தொடர்புகளுக்கு :
**076 206 1703**

(351)

## காணி விற்பனைக்கு




**5 பரப்பு காணி**

(LOT 1) - 1 பரப்பு 3குழி
(LOT 2) - 1 பரப்பு
(LOT 3) - 2 பரப்பு
(LOT 4) - 1 பரப்பு 4குழி

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்திற்கு அண்மையாக பலாலி வீதியிலிருந்து 150m தூரத்தில் வீட்டுடன் கூடிய 5 பரப்பு காணி விற்பனைக்குண்டு.

- மொத்தமாகவும் அல்லது பிரித்தும் கொடுக்கப்படும்.
- விலை நேரில் பேசித்தீர்மானிக்கப்படும்.

- யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம் 450m
- நொதேண் வைத்தியசாலை 350m
- நல்லூர் கோவில் 1200m

தொடர்புகளுக்கு :
உரிமையாளர் :
**075 776 7777 / 076 625 5277**

(362)

## வீடு விற்பனை

சுன்னாகம் கிழக்கு புகையிரத நிலையத்திற்கு அருகாமையில் வீடு விற்பனைக்குள்ளது.

Whatsapp
**416 303 5706**
SRILANKA
**076 934 7728**

(324)

## வீடு - நிலம் விற்பனை

இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரிக்கு சமீபமாக 5 பரப்பு காணியும் நல்ல நிலையில் உள்ள வீடும் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு :
**076 473 4160**

(368)

## Happy Supermarket - உரும்பிராய்

| | | | |
|---|---|---|---|
| 1 Kg வெள்ளை சீனி | - 265 /= | | Max 3Kg |
| 1 Kg Prima கோதுமை | - 188 /= | | |
| 1 Kg றவை | - 288 /= | | |
| 1 Kg சிவப்பு பருப்பு | - 288 /= | | |
| 1 Kg தீட்டல்பச்சை | - 165 /= | | |
| 1 Kg சம்பா | - 230 /= | | |
| 1 Kg வெள்ளைப் பச்சை | - 205 /= | | |
| 10 Kg விஜிதா நாடு | - 1920 /= | | |
| 180g Protinex | - 1799 /= | ~~2000/=~~ | |
| 400g Sustagen | - 3600 /= | ~~3990/=~~ | |
| 750ml New VSP நல்லெண்ணை | - 1455 /= | ~~1550/=~~ | |
| 1 Kg Astra மாஜரின் | - 1400 /= | ~~1600/=~~ | |
| 1 Kg கட்டி உப்பு | - 80 /= | ~~110/=~~ | |
| 01 Sun பப்படம் | - 185 /= | ~~225/=~~ | |
| 450g நெஸ்டமோல்ட் | - 749 /= | ~~780/=~~ | |
| 330g கோல்ட் மாரி பிஸ்கட் | - 270 /= | ~~380/=~~ | |

1049/=




~~1110/=~~

தரமான பொருட்களை சிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள். மேலதிக விலைக்கழிவு விபரங்களிற்கு எமது Facebook:-happy basket.lk இனை நாடவும்

பலாலி வீதி,
உரும்பிராய் சந்தி.

Happy Supermarket
0777 8080 30

(390)

## CANADA VISA

UK யின் பிரபல சட்டத்தரணியின் அனுசரணையுடன் செய்து கொடுக்கப்படும்.

**021 222 5686**
**076 424 7111**
**Expo Net Overseas Consultants**
345, Kasthuriyar Road, Jaffna.

(293)

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1989 ஆம் ஆண்டு பரணி நட்சத்திரம் கிரக பாவம் 22 செவ்வாய் 8 இல் உள்ள அரச திணைக்களத்தில் பணி புரியும் (HND IT) மணமகனுக்கு பொருத்தமான பணிபுரியும் மணமகளை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.

**077 864 9878**
**077 634 3103**

(372)

## உதவியாளர் தேவை

யாழ் நகரிலுள்ள கிளினிக் ஒன்றிற்குப் பகுதி நேரமாகப் பணிபுரியத்தக்க பெண் உதவியாளர் தேவை.

தொடர்பு
**077 375 4490**
**077 220 2769**

(C-0077)

## லொத்தர் ரிக்கட்

### விற்பனையாளர் தேவை

தேசிய அபிவிருத்தி லொத்தர் ரிக்கட் விற்பனை செய்ய விற்பனையாளர் தேவை.
கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.

தொடர்புகளுக்கு :
**076 185 2241**

(371)

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 07.04.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org